பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 10 றஜப் 6 இதழ்: 133
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-6-77

## 9 மொழிவழித் தொழிற்சங்கங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு

கொழும்பு, வியாழன்
எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவிப்பதென்று ஒன்பது மொழிவழித் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

கொழும்பு அரசாங்க எழுதுவினைஞர்சங்க பணிமனையில் இந்த ஒன்பது சங்கங்களும் நேற்றுக் கூடி இவ்வாறு தீர்மானித்தன.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம், தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம், மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கம், துறைமுக நாளாய் இயக்குநர் சங்கம், துறைமுக வழிகாட்டி அத்தியாவசிய சேவைகள் சங்கம், இலங்கைத் தொழிலாளர் கழகம் ஆகிய ஒன்பது சங்கங்களே தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

நேற்றைய கூட்டத்தில்எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

ஃ சகல மொழிவழித் தொழிற்சங்கங்களும் தமது உறுப்பினர்களை தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிர பிரசாரத்தில் ஈடுபடுத்தவேண்டும்.

ஃ தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடும் சகல தொகுதிகளிலும் கொழும்பு மத்தியிலும் கூட்டங்கள், கருத்தரங்குகளை நடத்துதல்.

ஃ தேர்தலில் தமிழ் மக்களின கடமை என்ன என்பது பற்றி துண்டுப்பிரசுரம் வெளியிடுதல்.

[8ம் பக்கம் பார்க்க[

# நல்லூர் கிராமிய வங்கியில் துப்பாக்கி முனையில் கொள்ளை!

## சைக்கிளில் வந்த ஐவரில் மூவர் உடன் பிடிபட்டனர்

### சைக்கிள்களும் அகப்பட்டன!

யாழ்ப்பாணம், வெள்ளி

நேற்று பட்டப்பகல் பதினொருமணிக்கு, நல்லூர் கிராமிய வங்கி கொள்ளையடிக்கப்பட்டது!

[illegible] ஐவர் கிராமிய வங்கியினுள் புகுந்து, துப்பாக்கி[illegible]யில் இக்கொள்ளையை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட ஐவரில் மூன்று சந்தேக நபர்கள், சிலமணிநேரத்துக்குள்ளேயே பிடிபட்டுவிட்டனர்!

**சைக்கிளில் வந்த ஐவர்**

நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கி கொள்ளை சம்பந்தமாக கூறப்படுவதாவது:

நேற்று பகல் சுமார் பதினொரு மணியளவில், ஜனசந்தடி மிகுந்த நேரத்தில் நல்லூர் கிராமிய வங்கியினுள் திடீரென மூன்று இளைஞர்கள் புகுந்தனராம். அவர்களில் இருவரின் கைகளில் கைத்துப்பாக்கி (றிவோல்வர்) இருந்ததாம். பெண்களும் ஆண்களுமாக நகைகளை அடைவு வைத்துக் கொண்டிருந்த நேரத்தில், இந்த இளைஞர்கள் திடீரென மனேஜரிடமும் காசாளரிடமும் சென்று அங்கிருந்த பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றனராம்.

அந்த நோத்தில் ஏற்பட்ட சிறு மோதலில் மனேஜரும் காசாளரும் சிறுகாயமடைந்ததாகத் தெரியவருகிறது.

வங்கியில் கொள்ளையடித்த பணத்துடனும், நகைகளுடனும் வெளியேறிய இந்த இளைஞர்கள், வாசலில் தயாராக நின்ற சைக்கிளில் ஏறிப்புறப்பட்டுச்சென்றனராம.

வங்கியைக் கொள்ளையிடச் சென்ற கோஷ்டியில் மொத்தம் ஆறுபேர் இருந்தனரென்றும் இந்த ஐந்து இளைஞர்களும் நான்கு சைக்கிள்களில் சென்றனரென்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

**வீதிவழியாக ஓடினர்**

வங்கியில் கொள்ளையடித்ததன் பின்னர் இவர்கள் ஆடிய பாதம் வீதி வழியாகச்சென்று சைவப்பாடசாலை ஒழுங்கை, பத்திரகாளி கோவிலடி. இராமலிங்கம் வீதி வழியாகப் பருத்தித்துறை வீதியை அடைந்து நல்லூர் செட்டித்தெருவில் வேகமாகச் சென்று கொண்டிருக்கையில் அகப்பட்டுக் கொண்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

**சைக்கிளைவிட்டு ஓட்டம்**

இதற்கு முன்னதாக வங்கியில் கொள்ளையடித்துவிட்டு சைக்கிளில் ஓடும்போது, நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சிலர் விஷயம் அறிந்து துரத்திச் சென்றனர் என்றும் இந்த விபரம் அறிந்து வங்கிக் கொள்ளையினர் ஒரு சைக்கிளைவிட்டு மற்றைய சைக்கிள்களில் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**மக்களும்துரத்தினர்**

பொலிஸாரின் விசாரணைகளின்படி நல்லூர் கிராமிய வங்கியில் கொள்ளையடித்துவிட்டு சைக்கிளில் தப்பி ஓடிய போது, பொதுமக்கள் துரத்திச்

(8-ம் பக்கம் பார்க்க]

## "த. வி. கூட்டணி வேட்பாளர் அனைவருக்கும் வெற்றி கிடைக்கும்"

### 'அமிர்' உரை

கோண்டாவில், வியா.
'தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் அத்தனை பேரும் பொதுத்தேர்தலில் வெற்றியீட்டுவர் என்பது திண்ணம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்

கோண்டாவில் கிழக்கு அரசடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் [illegible] வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரத்தை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட நம்பிக்கையைத் தெரிவித்தார்.

திரு. இ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் 'பொதுத்தேர்தலில் த. வி. கூட்டணியின் தமிழ் ஈழக்கொள்கைக்குக் கிடைக்கப்போகும் மகத்தான வெற்றியை வெளிநாடுகள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றன' என்றார்,

திரு. வி. ஆனந்தசங்கரியும் பேசினார். [உ

## சாவகச்சேரி பொலிஸ் சார்ஜண்ட் கைது

### 25 ரூபா லஞ்சம் பெற்றாராம்

யாழ்ப்பாணம், வெள்ளி
சாவகச்சேரிப் பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் ஜே. பி. ஜயவர்த்தன என்பவர் இலஞ்சத்தடுப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வந்த லஞ்சத்தடுப்பு ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எஸ். ஏ. கந்தசாமி, கான்ஸ்டபிள் செல்வராஜா ஆகியவர்களைக் கொண்ட இரகசிய பொலிஸ் கோஷ்டியே இவரைக் கைது செய்தது.

ஒரு வழக்கு விஷயமாக 25 ரூபாய் லஞ்சம் கேட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நீதவான் திரு. நவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு லஞ்ச ஆணையாளரின் பணிப்பின்பேரில் திகதி குறிப்பிடப்படாமல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## வரட்சியின் கொடுமை: மூவாயிரம் ஏக்கர் நெற்காணி கைவிடப்பட்டது

உடுப்பிட்டி, வியா.
கடந்தவருடம் யாழ்.மாவட்டத்தில் சிறுபோகம் முழுவதும் நிலவிய வரட்சியில் மூவாயிரம் ஏக்கர் காணியில் நெற்செய்கை கைவிடப்பட்டது

இத்தகவல் யாழ்.மாவட்டச் செயற்படுதிட்டவிவசாய அபிவிருத்தி யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1976-ம் ஆண்டு சிறுபோகத்தில் இம்மாவட்டம் சிறிதளவு மழையையே பெற்றது என்றும், பருவகாலமழை தவறியதினால் ஏற்பட்ட வரட்சியின் தாக்கத்தைச் சிறுபோகப் பயிர்ச்செய்கையில் காணக்கூடியதாக இருந்தது என்றும் இதனால் கடந்தவருடம் சிறுபோகத்திற்கென இலக்கிடப்பட்ட மொத்தக் காணியைப் பயிர்ச்செய்கைக்குக் கொண்டு வருவதற்கு இம்மாவட்டத்தில் உள்ள குளங்களில் போதியளவு நீர் இருக்கவில்லை என்றும் பிரஸ்தாபசெயற்படுதிட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இச் செயற்படு திட்டத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இரணைமடு, அக்கராயன் உட்பட மேட்டுநிலத்திலுள்ள குளங்களில் உள்ளநீரைக் கொண்டு சிறுபோகத்தில் ஏறக்குறைய 11,000 ஏக்கா காணியில் நெல் பயிரிடப்பட்டது. சிறுபோகம் முழுவதும் நிலவிய வரட்சி பெருங்குளங்களிலுள்ள நீரை எதிர்பார்த்ததிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

## மின்சாரசபைத் தலைவர் வேலை நீக்கம்!

### ஊழியர் வேலைநிறுத்தம்

(கொழும்பு)
இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் சுமார் 1,500 பேர் நேற்று ஆட்சேப வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர்.

மின்சாரசபைத் தலைவராக இருந்த திரு. சந்திரசிங்க என்பவரைப் பதவி நீக்கம் செய்ததை ஆட்சேபித்தே இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது.

திரு. சந்திரசிங்கவின் இடத்திற்கு திரு. ரி. சிவஞானம் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவினால் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-இ)

## பிஸ்கால் விற்பனை அறிவித்தல்

வடமாகாணம்,
நீதவான் நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை.

வழக்கு இல. 9113

கணபதி அன்னப்பிள்ளை,
வேலணை மேற்கு,
வேலணை.
— வழக்காளி.

எதிர்

கணபதி சபாபதி,
காம்ப் வீதி,
ஊர்காவற்றுறை.
— எதிராளி.

எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதி 10 மணியிலிருந்து இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை குறித்த காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது. இவ் விற்பனைத் தொகையிலிருந்து 1968 சித்திரை 17 தொடக்கம் 1975 ஆடி 5-ம் திகதி வரை ரூபா 840/-க்கு 10 வீத வட்டியும், தீர்வைத் திகதியிலிருந்து சேர்ந்த முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் அறவாக்கப்படும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறை வேலணை மேற்கிறை ''சூரிமுத்தம்'' நிலப்பரப்பு 7 1/2 வடக்கு முத்தன் கணபதியினுதனம், தெற்குகணபதி காத்தியினுடைய ஆதனம், மேற்கு கணபதி சுந்தரத்தினுடைய ஆதனம், கிழக்கு ரேட்டுமாகும்.

**தா. குலஞானம்**
பிஸ்கால் / பதிவாளர்,
நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை.
6524

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை அரசினர் பாடசாலைக் கல்வி நிறுவனங்கள் ஊழியர் சங்கத்தினதும் அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்கத்தினதும் வடபிரதேசக் கிளைகள் ஒன்றிணைந்து விசேட பொதுக்கூட்டம் ஒன்றினை நடாத்தவிருக்கின்றன.

இக்கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 26ம் திகதி காலை நடைபெறும். (உ)

## யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுள்ளது)

# கழிவு மா ஏலவிற்பனை

மேற்படி சங்கத்தில் சேர்ந்துள்ள கழிவு (கூட்டு) மா கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது.

முடிவு திகதி: 28-6-77.

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொதுமுகாமையாளர்.**
74/3, அல்பிரட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
22-6-77. 6522

# குளிர்த்தி

செல்வச்சன்னதி ஆலய குளிர்த்தி பொங்கல் உற்சவம் 27-6-77 இரவு நடைபெறும்.

**த. துரைரத்தினம்.**
உரிமையாளர்:
6526

## வெற்றிவேலு யோகேஸ்வரன்

சட்டத்தரணியும்,
நொத்தாரிஸ-ம்
யாழ்ப்பாணம்.

1973-ம்ஆண்டின் 44-ம்இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 283-ம் பிரிவின்கீழ் மரணச் சொத்து நிர்வகாத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் பலாலிவீதி 13/1-ம் இலக்கத்தைச் சேர்ந்த கதிர்காமு தம்பிமுத்துவின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

வலயம்: யாழ்ப்பாணம்
இலக்கம்: 351

தம்பிமுத்து கைம்பெண் நல்லம்மா இல.13/1 பலாலி வீதி, யாழ்ப்பாணம்,
விண்ணப்பகாரி

எதிராக

1. தம்பிமுத்து ஹென்ஸ் மோகன்
2. தம்பிமுத்து மகள் பரமேஸ்வரி பராயமற்ற.
3. தம்பிமுத்து பாரதிதாஸன் பராயமற்ற.
4. தம்பிமுத்து மகள் ரஞ்ஜினி பராயமற்ற.
5. தம்பிமுத்து கண்ணதாஸன் பராயமற்ற.
6. தம்பிமுத்து மகள் மைதிலி எல்லாரும் யாழ்ப்பாணம்.
7. சின்னர் வேலையா அல்லது நடராசா மாதனே,புலோலி [illegible]க்கு, பருத்தித்துறை

பிரதிவாதிகள்

1973-ம் ஆண்டின் 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 281-ம் பிரிவின் கீழ் 1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 22-ம் திகதியைக் கொண்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிக்கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் திருபிக்கப்பட்டதெனத் திருப்தியடைந்தன் பேரில் 1977ம் ஆண்டு ஆடி மாதம் 14ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எவராவது எதிர்க்காரணங்கள் காட்டினலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள்

(அ) மீதாக வழங்கப்படவிருக்கும் மரணச் சொத்து நிர்வாக தத்துவப்பத்திரத்தைப் பெறும் உரித்து சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் கைம்பெண் என்றவகையில்சொல்லப்பட்ட விண்ணப்பகாரிக்கே வழங்கப்படவேண்டுமெனவும், இவ்விண்ணப்பத்தின்

(ஆ) நோக்கங்களுக்காக பராயமற்றவர்களான 3ம், 4ம் 5ம், 6ம் பிரதிவாதிகளின் பாதுகாவலராக மேற்சொல்லப்பட்ட 7-ம் பிரதிவாதி நியமிக்கப்படுவாரென்றும் யாழ்ப்பாணம் நீதி நிருவாக வலயத்துக்கான தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்

1977-ம் ஆண்டு சித்திரை மாதம் 22ம் திகதி,

ஒப்பம்

**கா. கணபதிப்பிள்ளை**
தத்துவப்பத்திர அதிகாரி
யாழ்ப்பாணம்.
6451

## லண்டனில் கைது!

லண்டன், ஜூன் 23

ஈழத்தமிழர் பொருளாதார அமைப்பாளரும் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவருமான சட்டத்தரணி திரு. எம். குமரகுரு உட்பட மூன்று இளைஞர்கள் லண்டன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டார்கள்.

லண்டனிலுள்ள தேயிலை பிரச்சார மண்டபத்திற்கு அருகில் வைத்து இவர்கள் கைதானார்கள். எலிஸபெத் மகாராணியாரின் முடிசூட்டல் 25-ம் வருட வைபவத்தை யொட்டி, இலங்கைத் தமிழர்கள் சார்பில், இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள் என்று கைதுசெய்யப்பட்டனராம். (செ)

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்பிறே பெயின்டர் (Spray-painter) தேவை. உடன் நேரில் சந்திக்கவும். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 6512

### தேவை

யாழ்ப்பாணம் பிரபல சைவ போசனசாலைக்கு அனுபவமுள்ள தேநீர் தயாரிப்பவர்களும், உணவு பரிமாறுபவர்களும் தேவை. முன் அனுபவ - நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6511, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6511

## அம்பலவாணர் அரங்கு

# இன்று திறப்புவிழா

கிராமச்சங்க உறுப்பினராகவும், தலைவராகவும் பணிபுரிந்து புங்குடுதீவின் வளர்ச்சிக்காக அரைநூற்றாண்டிற்கு மேல் பாடுபட்ட உயர்திரு. சண்முகம் அம்பலவாணர் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு நல்ல மனிதர்.

சிங்கப்பூரில் உத்தியோகம் பார்த்துவிட்டு தன்னூருக்கு திரும்பிவந்து பொதுத்தொண்டில் ஈடுபட்டவர் இவர் இவருடைய பெரியதாயாரின் மகனுரே: புங்குடுதீவுக்குப் புதுவாழ்வு அளித்து மறைந்த பெரியவாணர். பெரியவாணர் ஒரு சிர்திருத்தவாதி. பின் தங்கி நின்ற தீவுப்பகுதி முன்னேற வேண்டும் என்று முயன்றவர். அவருடைய முயற்சியின் பயனகவே புங்குடுதீவு வேலணையூர் தாம்போதி (பாலம்) உருப்பெற்றது. அண்ணனுக்கு வலக்கரமாக நின்று பொருள்கொடுத்தும் துணை புரிந்தும் வாழ்ந்தவர். 'அ[illegible]ளிக்கொடுத்த அம்பலவாணர், இவரை சின்னவாணர் என்று புங்குடுதீவு மக்கள் அன்புடன் அழைத்து வருகின்றனர். இவருக்கும் இவருடைய அண்ணனுக்கும் நினைவுச் சின்னங்கள் பலவுள்ளன. புங்குடுதீவு, வேலணைப்பாலம், புங்குடுதீவு அரசினர் மகாவித்தியாலயம், புங்குடுதீவு பெரிய தபாற்கந்தோர் யாவும் இவ்விருவரின் அரும் பெரும் பணிகளால் உருவாகினவையே

சின்னவாணர் இன்று எண்பத்தைந்து வரை எட்டிப்பிடித்தும், இளைஞராகவே இலங்குகின்றார். இவர் திருமணம் புரிந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. இவருடைய பாரியார் கற்பகம், பெயருக்கேற்ற கொடையும், தயையும் உடையவர். இவர்களை வாழ்நாளிலேயே பாராட்ட நினைத்த கிராமம் அம்பலவாணர் அரங்கும் அமைத்தது. இன்று விழாவும் விமரிசையாக நடைபெறுகிறது.

— வி[illegible] இ. ஆறுமுகம்

## விளம்பரம்

மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ. சங்கம் ஆரம்பிக்கவிருக்கும் அச்சகத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 25 வயதுக்கு மேல் 45 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

### 1. எழுத்துக் கோர்ப்பவர்: (கொம்பசிட்டர் இருவர்)

மும்மொழிகளிலும் வேலைசெய்யக்கூடியவர்களுக்கும் அச்சகம் சம்பந்தமான எல்லா வேலைகளும் தெரிந்தவர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும்.

### அச்சு இயந்திர இயக்குனர் (ஒருவர்). (சிலிண்டர் மெசின் மைண்டர்).

சிலிண்டர் மெசினில் குறைந்தது தொடர்ச்சியாக நாலு வருடங்கள் வேலை செய்த அனுபவம் வேண்டும்.

### அச்சு இயந்திர இயக்குனர் (ஒருவர்). பிளேற்றின் மெசின் மைண்டர்.

கொம்போசிங், பைண்டிங் வேலைகள் தெரிந்தவர் விரும்பக் கூடியது.

### புத்தகம் கட்டுபவர் (பைண்டர்) ஒருவர்.

### ஒப்பு நோக்குபவர் (புருவ் ரீடர்).

மும்மொழிகளும் தெரிந்தவராகவும், ஒப்பு நோக்குவதில் குறைந்தது இரண்டுவருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

ஒரு ரூபா செலுத்தி சங்கத்தில் இருந்து பெறக் கூடிய விண்ணப்பப் படிவத்தில் இம் மாதம் 28-6-77ம் திகதிக்கு முன்பு அனுபவம், நற்சான்றிதழ் (பிரதிகள்) ஆகியவற்றையும் இணைத்து விண்ணப்பிக்கவும்.

**பொதுமுகாமையாளர்,**
மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.
22-6-77. 6521


# சிந்தெட்டிக் கற்பூரம் பெட்டிகளில்

கிடைக்குமிடம்:

**சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்**
516, ஸ்கின்னர்ஸ் ரேட்டுத் தெற்கு.
கொழும்பு - 10
போன்: 24261-5


## வேலணை ப. நோ. கூ. சங்கம் வேலணை

# வெற்றுச்சாக்கு விற்பனை

மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 8000 [எண்ணாயிரம்]க்கும் மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குள்ளன. கொள்வனவுசெய்ய விரும்புவோர் ரூபா 5/- கேள்விப் பத்திரப்பணமாகவும் ரூபா 250/- கேள்விப் பணமாகவும் கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களை அறிய விரும்பின் சங்க அலுவலக நேரத்தில், சங்க அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம். தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் ரூபா 500/- பிணைப்பணமாகக் கட்டுவதுடன் 30-6-77க்கு முன் முழு வெற்றுச்சாக்குக்குமுரிய பணத்தைச் செலுத்தி சாக்குகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

முடிவு திகதி: 29-6-77. காலை 10-00 மணி.

**பொதுமுகாமையாளர்.**
வேலணை,
23-6-77. 6527

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னுகம் மக்கள் வங்கியில் உதவி முகாமையாளராகப் பணியாற்றிய திரு. எஸ்.சேனுதிராசா பதவி உயர்வுடன் களுவாஞ்சிக்குடி கிளைக்குமுகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்:

வங்கி ஊழியர்களும், சுன்னுகம் வர்த்தகப் பிரமுகர்களும் அளித்தபாராட்டுவிருந்துபசாரத்தில் சுன்னுகம் மக்கள் வங்கி முகாமையாளர் பேசுகையில், ஒரு சிறந்த உத்தியோகத்தரை தாம் இழக்கும் அதே நேரத்தில் அவர் உத்தியோக உயர்வு பெற்றுச் செல்வது பெருமை தருகிறது என்று கூறினர்.

## பாழுங்கிணற்றுக்கு வயோதிபர் பலி!

சாவகச்சேரி, வியா.

96 வயதுள்ள வயோதிபர் பாதையோரமுள்ள பாழுங் கிணறொன்றில் தவறி விழுந்து மரணமானர்.

இச்சம்பவம் மட்டுவில் தெற்கில் நடைபெற்றது.

க. தம்பன் என்பவரே இவ்வாறு மரணமானர்.

சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கந்தசாமி விசாரணை நடத்தி, அங்கு அளிக்கப்பட்டசாட்சியங்களைக் கொண்டு விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (இ)

## ரோட்டரி மாதர் கழகம்

### 20-6-77ல் நடாத்திய அதிர்ஷ்ட லாபச் சீட்டின் முடிவு

(1) 2438, (2) 120, (3) 2358, (4) 1155, (5) 1660, (6) 793, (7) 1964, (8) 72, (9) 2118, (10) 934, (11) 1656, (12) 2364, (13) 1733, (14) 611, (15) 2430, (16) 2406, (17) 1011, (18) 531,

6520

ஏனைய நாடுகளுடன்

# இந்தியா சௌஜன்ய உறவுடன் நடந்து கொண்டுள்ளது

## வெளியுறவு அமைச்சு அறிக்கை

புதுடில்லி, ஜூன் 23

பாரதம் ஏனையநாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற அடிப்படையில் பரந்துபட்ட ரீதியிலான நல்லுறவுகளை வைத்துக்கொண்டுள்ளது என்று பாரத வெளிநாட்டு அமைச்சின் 76-77-ம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனுடன் பாரதம் குறிப்பிடத்தக்க நல்லுறவுகளை பரிமாறிக்கொண்டுள்ளது என்றும் இருநாடுகளுக்கும் இடையிலானபொதுவான பல விஷயங்களில் ஒத்தகருத்து நிலவியதே இது சாத்தியமானதற்குக் காரணமாக அமைந்தது என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

பாரத - அமெரிக்க உறவுகள் சர்வதேச ரீதியிலும் வர்த்தக பொருளாதாரரீதியிலும் உறுதியடைந்திருந்தன என்னும் அறிக்கை கூறுகிறது.

சீனுவுடன் 15 ஆண்டுகளின் பின் ராஜதந்திர உறவுகள் முதல்தடவையாக அமுலாகவுள்ளன என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானுடனும் பாரதத்தின் புதிய அரசு நல்லுறவைப் பலப்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பாரத-பங்களாதேஷ் காவிரி நீர்ப் பிரச்னை பற்றியும் அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. (உ)

இந்துசமுத்திர

# இராணுவப் போட்டி:

## மாஸ்கோவில் பேச்சுவார்த்தை

மாஸ்கோ, ஜூன் 23

இந்துசமுத்திரக் கடல்பிராந்தியத்தில் வல்லரசுகளின் இராணுவப் போட்டாபோட்டிகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க-சோவியத்யூனியன் பிரதிநிதிகள் மாஸ்கோவில் பேச்சுவார்த்தைகளை நேற்று ஆரம்பித்தனர்.

இப் பேச்சுவார்த்தைகள் ஒருவாரம் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

# இடிஅமின் உல்லாசமாக பொழுதைக் கழிக்கிறார்

## பெண் நிருபர் புதிய தகவல்

வாஷிங்டன், ஜூன் 23

உகண்டா ஜனாதிபதி இடிஅமினின் உயிருக்கு எதுவித ஆபத்தும் இல்லையென்றும் அவர் தமது நான்காவது மனைவியுடன் மகிழ்ச்சியுடன் விடுமுறையைக் கழித்துவருவதாகவும் அமெரிக்காவில் கொலம்பியா ஒலிபரப்பு நிலையத்திடம் பெண் நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இடிஅமினின் ஏ. எல். சி. செய்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன் [illegible] தாக அமெரிக்க [illegible] நுட்ப வியலாளர் குழு ஒன்று அறிவித்துள்ளது.

நல்ல சுகத்துடன் இடிஅமின் இருக்கிறார் என்பதை தம்மால் உறுதியாகக் கூற முடியுமென்றும் இக் குழு தெரிவித்தது.

### உகண்டாவில் பதவிமாற்றங்கள்

இதேவேளை, நைரோபியில் இருந்து வெளியான செய்திகள் உகண்டாவின் ஆயுதப் படைகளில் பதவிமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த நால்வரை உகண்டாவை விட்டு வெளியேறுமாறு உகண்டா அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் என்றும் நைரோபி செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமையில் இருந்து இடிஅமின் காணுமல் போய்விட்டாரென செய்திகள் பரவத்தொடங்கின.

இவர் உகண்டா விமானப் படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தியும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. [உ]

# ஜெயப்பிரகாஷருக்கு அசாதாரண வசதிகளா?

## இல்லை என்கிறார் தேசாய்

புதுடில்லி, ஜூன் 23

'ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு அசாதாரணமான வசதிகள் எதுவும் செய்துகொடுக்கப்படவில்லை' என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று லோகசபையில் கேள்வி நேரத்தின்போது பேசுகையில் கூறினார்.

ஆயினும் அவரது உடல்நிலை குறித்தும் அவரது தேசிய அந்தஸ்தை கருத்திற்கொண்டும் சில வசதிகள் அவருக்கு அளிக்கப்பட்டன என்று பிரதமர் சொன்னார். (உ)

ஜனதா மாநில முதல்வர்கள்

# தலைநகரில் தலைவர்களைச் சந்தித்தனர்!

புதுடில்லி, ஜூன் 23

பல மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களும் பதவியேற்கவிருக்கும் முதலமைச்சர்களும் புதுடில்லிக்குப் படையெடுத்துள்ளனர்.

ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை இவர்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஒரிஸா, உத்திரபிரதேஷ், ஹிமாசல, ஹரியாணு, பீஹார் மாநில முதலமைச்சர்கள் ஜனதா கட்சித் தலைவா திரு. சந்திரசேகரைச் சந்தித்தனர்.

இவர்கள் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயையும் சந்திப்பர்.

ராஜஸ்தான், மத்தியபிரதேஷ் முதல்வர்களும் தலைநகர் வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனதா கட்சி பெரும்பான்மை பெருத, மக்கள் கட்டளையை பெற்ற மாநிலங்களின் அரசுகளுக்கும் ஜனதா கட்சி ஆதரவளிக்கும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் அறிவித்துள்ளார் (உ)

ம. கி. பிரச்னை:

# லிபிய - யூகோஸ்லேவிய அதிபர்கள் கவலை

லண்டன், ஜூன் 23

மத்திய கிழக்குப் பிரச்னை, ஆபிரிக்க நாடுகளில் உருவாகியுள்ளநிலை என்பன குறித்து லிபிய அதிபர் கேர்ணல்கடாபியும், யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவும் கவலை தெரிவித்துள்ளனர்.

பாலஸ்தீன பிரச்னை நீதியான விதத்தில் தீர்க்கப்பட வேண்டும் என்ற தமது கருத்தை இவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (உ)

# அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆகஸ்டில் சீனு செல்கிறார்

வாஷிங்டன், ஜூன் 23

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் ஆகஸ்ட் மாதம் 22ம்-திகதி சீன விஜயத்தை மேற்கொள்வார் என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

திரு. வான்ஸ் ஆகஸ்ட் 26ம் திகதிவரை சீனுவில் தங்கியிருப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. அவர் சீனத் தலைவர்களுடன் பரஸ்பர நல்லுறவு, பொதுவான உலகப் பிரச்னைகள் குறித்து ஆராய்வார் என கருதப்படுகிறது. (உ)

# கூடுதல் விலைக்குத் தீப்பெட்டி விற்றனராம

உடுப்பிட்டி, வியா.

விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நெல்லியடிப் பகுதியில் நடாத்திய திடீர்ப் பரிசோதனையில், தீப்பெட்டியை 30 சதம் கூட்டி விற்ற வர்த்தகர்கள் அகப்பட்டுக் கொண்டனர். இவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

— —

# 'அமிர்' பாராட்டு

புத்தளம், வியா

புத்தளத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும், திரு. நடராசா, தாம் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர் ஜனப். எம். இலியாசின் வெற்றிக்காக, ஒதுங்குவதாக அறிவித்து இப்போது, தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளில் உரையாற்றி வருகிறார். இது தமிழர்களின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு என திரு. ஏ. அமிர்தலிங்கம் பாராட்டியுள்ளார். (கெ)

# சேருவலையில் உப்பளம்

சேருவலை, வியா.

சேருவலையில் உப்பளம் ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சேருவலையில் இயற்கையாகவே உப்பு நன்குக விளைகிறது என்றும்இங்கு உப்பளம் ஒன்றை அமைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் கைத்தொழில் அமைச்சுக்கு தெரிவித்ததை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (இ)

— —

# நூல் விநியோகம்

கொழும்பு, வியாழன்

இறக்குமதி செய்யப்பட்ட தையல் நூலை சலுசலா ஸ்தாபனம் கூட்டுறவுக் கடைகள் ஊடாக விநியோகம் செய்யவிருக்கிறது.

வர்ண நூல்களும் இதில் அடங்கும். (உ)

— —

தமிழ்நாட்டில்

# ஜனதா தோல்வி புகட்டும் பாடம் என்ன?

## பிரதமர் தேசாய் சொல்கிறார்

புதுடில்லி, ஜூன் 23

எதிர்காலத்திலாவது புத்திசாலித்தனமாக நடக்கவேண்டும் என்ற பாடத்தை, தமிழ் நாட்டில் ஜனதாக்கட்சி ஏற்க வேண்டுமென்றும் இதுதான் தமிழ் நாட்டில் ஜனதா தோல்வியடைந்ததைக் காட்டுவதாகவும், இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்தார். பத்திரிகையாளர்களுக்கு அளித்தபேட்டி ஒன்றில் அவர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி தேர்தலுக்குஎமது சார்பில் யாரை நிறுத்துவது என்பதுபற்றி இப்போது பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதால், இப்பேச்சுவார்த்தைகளின் உண்மையை வெளியிட்டால் இப்பேச்சுவார்த்தை பயனில்லாது போய்விடும். சட்டமும் ஒழுங்கையும் பாதுகாக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பீகாரில், முதலமைச்சர் பதவியேற்றதும் அங்கு அமைதியேற்படும் என்றும் எந்த நக்சலைட்டையும் குற்றம் நிரூபிக்கப்படாமல் சிறைவைக்க வில்லை'' எனவும் கூறினார். (கெ-உ)

——

# 'தமிழ் ஈழம் ஏன் தேவை?'

கிளிநொச்சி, வியாழன்

'இன்றுஇலங்கையில் வாழும் தமிழ்மக்களின் சகலசெயல்திட்டத்துறைகளுக்கு அரசு இரும்புத்திரைபோட்டு வைத்திருக்கிறது. எந்தத் துறையிலும் தமிழ்மகன் சுதந்திரமாக, சுபீட்சமாக ஈடுபடமுடியாத துர்ப்பாக்கியநிலையில் இருக்கிறன். அவன் வாழவேண்டின் தன்னைத்தான் ஆளவேண்டும். இந்தநிலையை உணர்ந்தே தமிழர் கூட்டணி, ஆண்டபரம்பரையினர் மீண்டும்ஆழநினைப்பதில் என்ன தவறு. என்று கேட்டு தனிநாடு போராட்டத்தில் குதித்து இன்றைய தேர்தலை, ஒருசர்வஜன வாக்கெடுப்பாக தமிழ்மக்கள் முன்வைத்து நிற்கிறது '

இவ்வாறு கிளிநொச்சித் தொகுதியின் பூநகரி வாடியடி மைதானத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டுபேசிய சாவகச்சேரி வேட்பாளர் திரு. வி. என். நவரத்தினம் கூறினார்.

திரு ஏ சதாசிவம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'தமிழ்மாணவன் படித்துப் பட்டம்பெற பல்கலைக் கழகம் புகமுடியாதஅளவு தரப்படுத்தல்திரை- தமிழன் கலை கலாச்சார விழாவிற்கு போகமுடியாது- ராணுவ, பொலிஸ் திரை- இவ்வாருக எல்லா வழிகளிலும் தமிழன் திரையில் அகப்பட்டுத் தவிக்கிறுன். இந்நிலையில் இருந்து நாம்விடுபட தனித்தமிழ் ஈழம் ஒன்றே வழி.' (இ)

றபர் ஏற்றுமதி

# 23 கோடி ரூபா வருமானம்!

கொழும்பு, வியா.

இவ்வாண்டின் முதல் இரு மாதங்களில் றபர் ஏற்றுமதி மூலம்இலங்கைக்கு23கோடியே 11 லட்சத்து 87 ஆயிரம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது.

இது கடந்த ஆண்டிலும் பார்க்க 15 லட்சம் ரூபா அதிகமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட இரு மாதங்களிலும் 17 கோடியே 1 லட்சத்து27 ஆயிரம் கிலோ கிரும் தேயிலை இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகியது. (உ)

# ஜப்பான் சென்ருர்

பருத்தித்துறை, வியா.

குண்டசாலை விவசாயக் கல்லூரிப் போதனாசிரியர் திரு. க. சிவபாதம் கொழும்புத் திட்ட ஆதரவில் விவசாய இயந்திரவியல் தொடர்பான ஆறுமாத பயிற்சி பெற ஜப்பானுக்குச் சென்றுள்ளார்.

### மணிவாக்கு

கடவுள் உள்ளத்திற் குடிகொண்டிருப்பதாகவும், அவ்விதம் இருப்பதை உணர்வதாகவுமுள்ள ஒருவனே வாழ்வாங்கு வாழ்பவன்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
THE EELANAADU

# மதுவும் அரசும்

இலங்கை, இந்தியா முதலிய ஆசிய, ஆபிரிக்க நாட்டு மக்களை அடிமைப் படுத்த பிரிட்டன் முதலிய ஐரோப்பிய நாடுகள் கையாண்ட சூழ்ச்சிகள் பலப்பல. அவற்றில் அவர்கள் மிக முக்கியமானதாகக் கொண்டது மதுபானமும், மதிமயக்கும் லாகிரிப் பொருட்களும்.

இதைஉணர்ந்த மகாத்மா காந்தி, நாட்டை விடுதலை செய்யத் தயாரித்த நான்கு அம்ச நிர்மாணத் திட்டத்தில் மதுவிலக்கையும் ஒன்றுகச் சேர்த்தார். நாடு விடுதலைபெற்றபின்கூட, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பூரண மதுவிலக்கு நோக்கத்தையும் சேர்க்கச் செய்தனர். இந்தியாவில் புதிதாக ஆட்சிக்குவந்துள்ள ஜனதா கட்சி இதை நிறைவேற்ற எல்லா முயற்சிகளையும் செய்துவருகிறது.

எல்லா முக்கிய சமயங்கள் மட்டுமன்றி தமிழ் மறையான திருக்குறளும் கள்ளுண்ணாமையின் அவசியத்தை, சிறப்பாகத் தமிழர்களின் நலனுக்காக இடித்து இடித்துக் கூறியுள்ளது. தமிழகத்திலே இப்போது மக்களால்தெரிவு செய்யப்பட்ட இருபெரிய கட்சிகளும் மதுவிலக்குக் கொள்கையை ஆதரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மதியைக் கெடுக்கும் மதுவை ஒழித்தால்தான் மக்கள் மானத்துடன் நல்வாழ்வு வாழமுடியுமென்றும், இன்றேல் மக்கள் மீண்டும் அடிமைப்பட்டுவிடநேருமென்றும் கண்டே, இந்த அடிப்படை சீர்திருத்தத்தை வலியுறுத்திக் கையாண்டு வருகின்றார்கள்.

உலகின் முக்கிய சமயங்களெல்லாம் இதை வற்புறுத்தி இருந்தும் இக்காலத்தில் மத நெறிகளை மக்களில் எவ்வளவுபேர் மதித்துப் பின்பற்றுகின்றார்கள்? இதை உணர்ந்தே சட்ட மூலம் மதுவிலக்குச் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது போலும்.

இலங்கையைப்பொறுத்தவரையில் மதுவிலக்கு சட்ட மூலம் இதுவரை கொண்டு வரப்படவில்லை. பௌத்த தர்மத்துக்கு முதலிடம் தரப்படுவதாகவும், இலங்கையை தர்மதுவீபம் என்றும் பெருமையுடன் கூறிக் கொள்பவர்கள், பஞ்சசீலத்தில் ஒன்றான மதுவிலக்கை தேசீய முறையில் கைக்கொள்ள வேண்டாமா? இதற்கான நல்லகாலம் எப்போது வருமோ தெரியவில்லை.

ஆனால் அதற்கிடையில் மதுபானத்தால் மக்களுக்கும் நாட்டுக்கும் ஏற்படும் தீங்குகளையும் பாதகங்களையும் பிரதமர் உள்ளிட்டு எல்லாக் கட்சியினரும் உணர்ந்திருக்கவேண்டும். அரசின்வருமானம் குறைந்துவிடுமோ அல்லது தேர்தலில் வெற்றிபெறமுடியாதோ என்ற அச்சத்தால்தான் இவ்விஷயமாகத் தயங்குகின்றனர் போலும். காரணம் எதுவாயினும்சரி, வருகிற தேர்தல் அமைதியாக நடைபெறவேண்டுமாயின், தேர்தல் முடியும் வரையிலாவது மதுபானத்தை நிறுத்துவது நல்லது. தேர்தல் தினத்தன்றும், போயாதினங்களிலும் மதுபானத்தை நிறுத்துவதின் நோக்கம், அன்று கூடாத செயல்கள் நடக்காமல் இருப்பதற்கே. ஆனால் தேர்தல் பிரசாரங்களின் போது மட்டும் மதுபானத்தால் அசம்பாவிதங்கள் நடக்க அனுமதிக்கலாமா? பிரதமர் மட்டுமன்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் இதில் கருத்துவேற்றுமை கொள்ளமுடியாது. பிரதமரும், பல கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் கலந்து யோசித்து, தேர்தல் வரையிலாவது இப்போதிருந்தே கள்ளுக்கடைகளை மூடினால், வன்முறைகளின்றி அமைதியாகத் தேர்தல் நடைபெறவும் நாட்டுமக்கள் மது அரக்கன் பிடியிலிருந்து விடுதலையும் விமோசனமும் பெறவும் முடிவதாக இருக்கும்.

# ''சமயவளர்ச்சியில் சகலருக்கும் பங்குண்டு''

மாவிட்டபுரம், வியா.

'கிராமத்தில் ஆலயமொன்று பழுதடைந்திருந்தால் அக்கிராம மக்களுக்கு மட்டுமல்ல நாட்டுமக்களுக்குமே அது நல்லதல்ல. பழுதடையும் ஆலயங்கள் எந்தச்சமய ஆலயங்களானாலும்சரி, சமயபேதங்களை மறந்து ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதில் பொது மக்கள் ஈடுபடவேண்டும்'

இவ்வாறு ஊறணி புனித அந்தோனியார் ஆலய புனரமைப்பு ஒழுங்கு வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. க. வி. துரைசாமி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 'சமயங்கள்பல இருந்தாலும் அவை யாவும் ஒரேவழியைத்தான் காட்டுகின்றன. சைவசமயமானாலும், கிறிஸ்தவ சமயமானாலும் மக்களது ஆத்மீக வளர்ச்சிக்கு ஒரேவழியைத்தான் காட்டுகின்றன. ஆகவே நாம் சமய பேதங்களை வளர்க்காமல் எச்சமயமானாலும் அச்சமய வளர்ச்சிக்கு எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டும். சைவசமயத்தவர் கிறிஸ்தவ ஆலயத்திற்கு உதவக்கூடாதென்றோ கிறிஸ்தவர் ஒருவர் சைவ ஆலயத்திற்கு உதவக்கூடாதென்றோ எவரும் நினைக்கக்கூடாது. சகல சமய வளர்ச்சியிலும் சகல மக்களும் ஈடுபடவேண்டும்' என்றார்.

காங்கேசன்துறைப் பட்டின சபை முன்னாள் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கமும் பேசினார். (உ)

# ''மருத்துவ மாதருக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட வேண்டும்''

## ஆண்டுக் கூட்டத்தில் தீர்மானம்

பண்டத்தரிப்பு, வியா.

'சுகாதார இலாகாவில் ஏனையோருக்கு வழங்கப்படும் வெளிநாட்டு புலமைப் பரிசில்கள், மருத்துவ மாதர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்'

இவ்வாறு சுகாதார அமைச்சரைக் கோரும் தீர்மானம் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மருத்துவ மாதர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

சங்கத் தலைவி திருமதி தா. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மருத்துவமாதர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய சில தீர்மானங்கள் வருமாறு:

'அபிவிருத்தியடைந்த மேலை நாடுகளில் இருப்பதைப்போல நமது நாட்டிலும் மருத்துவ மாதர்களுக்கென தனியாக 'மருத்துவ மாதர் சபை' ஒன்று நிறுவப்படவேண்டும். பல்கலைக் கழக அந்தஸ்து உள்ள இச்சபைகளின் மூலம் மருத்துவ மாதர்கள் கூடிய மருத்துவ அறிவையும், பயிற்சியையும் பெறமுடியும்,

'கடமை நேரங்களின் பின்னர் பார்க்கும் பிரசவ வேலைக்கு, புறம்பான சேவை ஊதியம் வழங்கப்படவேண்டும்

'தற்போது அமுலில் இருக்கும் கடமைப் பட்டியல் மிக பழமை வாய்ந்ததாக இருப்பதினால் தற்காலத்திற்கேற்ற வகையில் மருத்துவ மாதர்கள் பெற்றுள்ள நவீன முறையிலான பயிற்சியையும் சேவையையும் அடிப்படையாக வைத்து புதிய கடமைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்'

இவற்றுடன் வேறுபல தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன. புதுவருட நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

# சிரமதானத்தில் சைவமன்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் மூத்தவிநாயகர் சைவ மன்ற இளைஞர்களால் நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் கட்ட சிரமதான வேலைகள் பூர்த்தியடைந்தன.

சைவமன்ற ஆலோசகர் திரு.காசிவிசுவநாதனால் ஆரம்பிக்கப்பட்ட இச் சிரமதானப் பணி பூச்சுவேலைகள், புதிய நிர்மாணவேலைகள் உட்பட பல பணிகள் முடிவடைந்துள்ளன. நாளை இவ்வாலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாவதால் உற்சவம் முடிவடைந்ததும் பெரிய அளவிலான இரண்டாம் கட்ட சிரமதானப் பணிகள் ஆரம்பமாகும். (கா)

# ''தமிழ் ஈழப் போராட்டத்துக்கு சமூக ஒருமைப்பாடு மிக அவசியம்''

### - இராஜலிங்கம்

உடுப்பிட்டி, வியா.

''தமிழ் ஈழப் போராட்டத்திற்கு அரசியல் ஒருமைப்பாடு மட்டும் இருந்தால் போதாது சமூக ஒருமைப்பாடும் இன்றியமையாதது.'' என்று உடுப்பிட்டித் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. த. இராஜலிங்கம் குறிப்பிட்டார்.

கரவெட்டி மேற்கில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறுகூறினார். திரு த. இராஜலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கடந்த காலத் தமிழர்களின் வரலாற்றைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் தமிழினம் பிரிவதன் மூலம் தான் இழந்த உரிமைகளைப் பெறமுடியும். உடுப்பிட்டித்தொகுதியில் நான்போட்டியிடுவது சிங்கள அரசியல் வாதிகளுக்கு அரசியல் ரீதியில் ஒருபெரிடியாகும்.

''35 லட்சம்தமிழ் மக்களது நன்மைக்காக எனதுஅரசாங்க பதவியையும் உதறித்தள்ளி விட்டு வந்த நான் எத்தகைய இடர் நேரினும், கஷ்டங்கள் வந்தாலும் எனது இலட்சியத்தைக் கைவிடமாட்டேன். எந்தக்கட்டத்திலும் தமிழினத்துக்குத் துரோகம் செய்யமாட்டேன்.'

திருவாளர்கள். ம. சே. கருணரத்தினம், சி. கதிரவேலுப்பிள்ளை, கே. துரைரத்தினம், எஸ் துரைராசா ஆகியோரும் பேசினர். திரு. எஸ். பொன்னம்பலம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

# 'மண் - பசளை - வளமாக்கி நூலுக்கு அறிஞர் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி.

''தமிழ் மொழியில் விஞ்ஞானத்திற்கு என்று ஒரு மொழிபெயர்ப்பு அற்றநூல் இல்லாத குறையை ''மண்-பசளை வளமாக்கி'' என்ற திரு. சி. கந்தையாவின் நூல் நிவர்த்தி செய்துள்ளது

இவ்வாறு ஊற்றுநிறுவனத்தின் சார்பில் திரு. சி, கந்தையா எழுதிய 'மண்-பசளை வளமாக்கி,' என்ற நூல் வெளியீட்டு விழாவில் முதலாவது பிரதியை வெளியிட்டு வைத்துப் பேசிய யாழ், வளாகத் தலைவர் பேராசிரியர் க; கைலாசபதி கூறினார்.

ஊற்றுநிறுவனத்தினரும் யாழ். வளாக புவியியல் பேராசிரியருமான திரு. ஊதர்ஜெயசிங்கம் தலைமையில் இவ்விழா யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பேராசிரியர் கைலாசபதி தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது: 'சுயமொழியில் விஞ்ஞானத்திற்கு என்றொரு தமிழ் புத்தகம் இதுவரை இல்லாதிருந்தது இருக்கின்ற புத்தகங்கள் வேற்று மொழிகளில் இருந்துமொழி பெயர்க்கப்பட்டிருந்தன இதனால்எமது குறைபாட்டை நீக்கத்தக்க வகையில் திரு. சி. கந்தையா அவர்களின் நூல் அமைந்திருப்பது நமது பாராட்டுக்கும் பெருமைக்கும் உரியது. இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களின் தேவை அறிந்து இந்தப் புத்தகத்தை தமிழில்எழுதிய திரு.கந்தையா அவர்களதும் இப்புத்தகத்தை வெளியிட்டுவைத்த ஊற்று நிறுவனத்தினரதும் சேவை போற்றுதற்குரியது.'

திரு. ஊதர். த. ஜெயசிங்கம் தமதுரையிற் கூறியதாவது:- வடபகுதி விவசாய மக்கள் இன்று ஓர்இக்கட்டான நிலையில் உள்ளனர், வெளிநாட்டில் இருந்து வந்திருந்த நிபுணர்கள் தமது ஆய்வின்படி யாழ்ப்பாணம் ஒரு கால கட்டத்தில் பாலைவனமாகும் தன்மையிலுள்ளதாகத் தெரிவித்திருந்தனர். இதனால் இப்பகுதி மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தகைய நூல்கள் விவசாய மக்களுக்குப் பெரும் நன்மை பயக்கும் 'மண்-பசளை வளமாக்கி' என்ற இந்த நூல் இந்தக்காலத்தின் தேவையை உணர்ந்துஎழுதப் பட்டுள்ளது'

நூலைப்பற்றி ஆய்வுரை நிகழ்த்திய மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. கனகசபாபதி தமதுரையில் 'இத்தகைய நூல்கள் மக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கும், மாணவர்களுக்கும் அத்தியாவசியமானவை எனினும் இத்தகைய நூலை அச்சிட்டு வெளியிட அதிகளவு பணம் தேவைப்படுகிறது. இதனாலேயே இத்தகைய பலபயனுள்ள நூல்கள் இங்கு வெளியிடத்தடையாகவுள்ளது. இதனால் இத்தகைய சிறப்பான அத்தியாவசிய நூல்களை வெளியிட்டு உதவ பணம் படைத்தவர்களும், தொழில் அதிபர்களும் முன்வரவேண்டும். என்றார். முதற் பிரதியை மில்க்வைற்தொழிலதிபர் திரு கனகராசா பெற்றுக் கொண்டார். இந்நூல் வெளியீட்டில் யாழ். லயன்ஸ் கழகமும்அதிக அக்கறை எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது. [கா]

# புங்குடுதீவில் மூன்றுநாள்விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கு திறப்பு விழாவும் சேவைநலம் பாராட்டு விழாவும் மாபெரும் கலைவிழாவும் இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறும்.

புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் நடைபெறும் இன்றைய முதல்நாள் விழாவுக்கு யாழ் நீதிபதி திரு. கே.வி.நவரத்தினம் தலைமைதாங்குவார். வடமாநில கல்விபதிப் [illegible] திரு. கே. [illegible] பிரதம விருந்தினராகவும், திரு. எஸ். எல். தம்பிஐயா சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்வார்.

பெரியவாணர் படத்தை யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும், சின்னவாணர் படத்தை திரு. என் கே மயில்வாகனமும் திறந்துவைப்பர்

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளுக்கு வண. சே. தனிநாயகம் அடிகள் தலைமை தாங்குவார்.

பிரதமவிருந்தினராக யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் கே. கைலாசபதி கலந்துகொள்வார்

மூன்றும் நாள் நிகழ்ச்சிகளுக்கு திரு. கே பாலச்சந்திரன் தலைமைதாங்குவார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ஆனந்தகுமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மூன்று தினங்களும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ)

# போதியளவு 'லக்ஸ்பிறே' விநியோகம்

கொழும்பு. வியாழன்

நாடுமுழுவதிலும் உள்ள கூட்டுறவுக் கடைகள் மூலம் போதியளவு 'லக்ஸ்பிறே'பால் மாவிநியோகம் செய்யப்படும் என்று தேசிய பால்சபை அறிவித்துள்ளது.

மாதாந்தம்18 லட்சம்றாத்தல் 'லக்ஸ்பிறே' பால்மா கூட்டுறவுக் கடைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்றும்சபை அறிவிததுள்ளது.

ஒருறாத்தல் பக்கட்டிலும் ஒருறாத்தல் இரண்டறைறாத்தல் டின்களிலும் போதியளவு பால் மாவிநியோகம் செய்யப்பட்டு வருகிறது. (இ)

# "தியாகம் செய்தவர்களையெல்லாம் துரோகிகள் என்கிறார்களே!"

## சுயாட்சிக் கழகத் தலைவர் கவலை



வண்ணார்பண்ணை, வியா. 'சுயாட்சிக்கழகத்தின் இலட்சியத்திற்கு பின்னால் வழிநடக்கக்கூடிய ஒருவர் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருக்கின்றார் என்றால் அது அமிர்தலிங்கமாகத்தான் இருக்கும்'.

இவ்வாறு அனலைதீவில் நடந்த தமிழர் சுயாட்சிக் கழகக் கருத்தரங்கில் உரையாற்றிய கழகத்தலைவர் திரு. நவரத்தினம் தெரிவித்தார்.

அனலைதீவு மத்திய சனசமூக நிலைய முன்றலில் திரு. ந. செல்லத்துரை தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் இதுவரை தமிழினத்திற்குப் பல துரோகங்களைச் செய்தவர்கள் எல்லாரும் இன்று தமது பழைய வேஷங்களைக் களைந்துவிட்டு புதிய போர்வை ஒன்றுடன் மக்களை ஏமாற்றி வாக்குப்பெற வந்துள்ளனர். இப்புதிய போர்வைக்கு புதிய முலாம் பூசப்பட்டு தமிழ்இளைஞர்களை ஏமாற்ற நாம் அனுமதிக்கமாட்டோம். புதிய போர்வைக்குள் பழையவர்கள் தான் இருக்கிறார்கள் என்பதை தமிழ்மக்களுக்குக்காட்டவேண்டியது எமது கடமையாகிறது.

தமது தொழில்களை எல்லாம் முடித்து, இளைப்பாற்றுச் சம்பளம்பெற்று இதன்பின் சுயநலனுக்காக அரசியல் இயக்கங்களில் நுழைந்தவர்கள் பலர் இன்று ஏதோ இலட்சியம் பேசுகின்றனர். இனத்திற்காகப் பலவிதமான தியாகங்கள் செய்தவர்கள் எல்லாரையும் இன்று துரோகிகள் என்று நாகூசாமல் பேசும் அளவுக்கு பதவிப்பித்துப் பிடித்து அலைகின்றனர்.

'உலக நாடுகள் எம்மைப் பார்க்கின்றன. இத்தேர்தலை எதிர்நோக்குகின்றன. எனவே எமக்கு வாக்களியுங்கள்' என்று அர்த்தமில்லாமல் மேடைகளில் கூறி மக்களை ஏமாற்றுகின்றவர்கள், உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு வசதியாக ஏற்கனவே என்னால் திட்டமிடப்பட்ட தனிநாட்டு தீர்மானத்தை ஏற்க ஏன் மறுக்க வேண்டும்? இதிலிருந்தே இவர்கள் முன்னுக்குப்பின் முரணாகப்பேசி மக்களிடம் வாக்குப் பெற முயல்கின்றனர் என்பது புரிகிறது.

உள்ளொன்றும் புறம் பொன்றுமாக பேசுபவர்கள் மக்கள் தலைவர்களாக இருக்க எந்தவகையிலும் தகுதியற்றவர்கள். இப்படியானவர்கள் இனிமேலும் விடப்போகும் தவறுகளைத் தடுப்பதற்கும், தொடர்ந்தும் துரோகச்செயல்களுக்கு உடந்தையாக இருக்காமல் பார்த்துக்கொள்வதற்கும் தமிழர் சுயாட்சிக்கழகப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டியது மிகஅவசியமாகின்றது.

அனலைதீவு கிராமசபைத் தலைவர் திரு. ஐ. சபாபதிப்பிள்ளை, முன்னாள் கிராமத்தலைவர் திரு. சு. இரத்தினசபாபதி, திரு ஜே. எம். செபஸ்தியாம்பிள்ளை, திரு. அ. தவநாதன், சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா, திரு. ஞா. அந்தோனிசாமி உட்படப் பலர் உரையாற்றினர். (இ)

# வேலர் குழு



வேலர்: எங்க மூதாதையர் குணம் எங்களை இன்னும் விட்டுப் போகவில்லை
மயிலர்: என்ன தாவுற குணமோ... கட்சிவிட்டு கட்சி.
வேலர்: சி... நான் அதைச் சொல்லவில்லை.
மணியம்: வேறென்ன குணம்?
வேலர்: அந்தக் காலம் குகையின் சுவர்களில் படம் வரைந்து, எழுதிப் பழகினார்கள். இன்று மதில்களில் எழுதிப் பழகிறார்கள்.

சுந்தர்

### கூட்டணிக்கு ஆதரவு திரட்ட

# கிளிநொச்சி ஆசிரியர்கள் குழு உடுப்பிட்டி செல்கிறது

கிளிநொச்சி, வியாழன். அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க கிளிநொச்சிக் கிளையைச் சேர்ந்த ஆசிரியர் குழு ஒன்று உடுப்பிட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு ராஜலிங்கத்தை ஆதரித்து கிளிநொச்சியில் பிரசாரம் செய்ய உள்ளது.

50 [illegible]களைக் கொண்ட இ[illegible]மாதம் 26-ம் திகதி உடுப்பிட்டிக்குச் செல்கிறது.

திருவாளர்கள்: என். சோதிநாதன், ஏ. தில்லைநாதன் ஆகியோர் தலைமையில் செல்லும் இக்குழுவில் மேற்படி சங்கத்தைச் சேராத பல ஆசிரியர்களும் இணைந்து செல்வர்.

இதேவேளையில் கிளிநொச்சி தமிழர் ஆசிரியர் சங்க கிளையினர் கூட்டணி வேட்பாளர் திரு. ஆனந்தசங்கரியை ஆதரித்து வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

"ஸ்ரீ லங்கா அரசியல் யாப்பில் பௌத்தம் அரசமதம் எனவும் சிங்களம் உத்தியோக மொழி எனவும் வகுக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ் ஈழத்தில் வாழும் தேசிய இனங்களின்" மொழி சமயம் என்பன புறக்கணிக்கப்பட்டுள்ளன.

"மலையக மக்கள் இலங்கைக் குடிகளான பின்னும் சாதாரண பிரஜைகளுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. போதாமைக்கு துப்பாக்கிச் சூடு, குடிருப்புகளுக்கு தீ மூட்டல், கொள்ளை அடித்தல் என்பன் நடைபெறுகின்றன.

"தமிழ்ப் பிரதேச அபிவிருத்தித்திட்டமிட்டுத்தடைப்படுத்தப்படுகின்றது. அதே வேளையில் தமிழ்ப்பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுகின்றது.

"தமிழர்களின் வேலைவாய்ப்பு வேண்டுமென்றே குறைக்கப்படுகிறது. தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர் படிப்பு மறுக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் வருகிறது.

"தமிழ்-முஸ்லிம் மக்களின் உயிர்களும் உடைமைகளும் பறிக்கப்படுகின்றன.

"இப்படியான திட்டமிட்ட பாரபட்ச புறக்கணிப்பு நடவடிக்கைகள், இலங்கையை கடந்த 30 ஆண்டுகள் ஆண்ட சிங்கள அரசுகளால் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நடத்தப் பட்டுள்ளது.

"எனவே இத்தகைய கொடுமைகளில்இருந்து மீள, ஆண்ட தமிழ்ப் பரம்பரை மீண்டும் ஆளத்தீர்மானித்துள்ளது. ஆகவே கிளிநொச்சி வாழ் ஆசிரியர்கள், தொகுதி மக்கள் அனைவரும் முன்னாள் ஆசிரியரான திரு. வீ. ஆனந்தசங்கரியை ஆதரித்து தமிழர் கூட்டணிச் சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு இட வேண்டும் என கேட்டுக்கொள்வதுடன் வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் கூட்டணி வேட்பாளர்களை தெரிவு செய்யும்படியும், இப்பொது ஜனவாக்கெடுப்பை நன்கு சிந்தித்து செயலாற்றும் படியும் கேட்டுக் கொள்கிறோம்." (இ)

## மகளிர் பேரவைக் கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி நல்லூர் மகளிர் பேரவைக் கிளை ஒன்றை நல்லூர்த்தொகுதிக் கூட்டணி அபேட்சகர் திரு. மு. சிவசிதம்பரம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். நல்லூர் 12-ம் வட்டாரத்தில் இக்கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது.

போசகர்கள்; திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திருமதி மு. சிவசிதம்பரம், தலைவி: திருமதி இ புவனேஸ்வரி உபதலைவிகள்; திருமதி யோ. இராசையா, திருமதி து. புவனம், செயலாளர்: திருமதி புஷ்பராணி குணசேகரம், உபசெயலாளர்கள்: திருமதி செல்லத்தம்பி பவளம், திருமதி து. மல்லிகாதேவி, பொருளாளர்: திருமதி நல்லநாதன் ருக்மணிதேவி.

12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (கா)

## பாடசாலைக்கு காணிநன்கொடை

### சனசமூக நிலையம் வழங்கியது

யாழ்ப்பாணம், வெள்ளி ஊரதீவு சனசமூக நிலையம் தனது சுயமுயற்சியினால் 8 பரப்புகாணியை புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது

நீண்ட நாட்களாக தனியார் கட்டிடமொன்றில் இயங்கிவந்த இப்பாடசாலையை ஊரதீவு கிராமத்தில் நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விஷயம் கல்விப்பகுதியினர் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டபோதுகட்டிடத்தை அமைப்பதற்கு மக்கள் காணியை வழங்கினால் கட்டட விஷயம் சுலபமாக முடியுமென் உறுதியளித்தனர்.

இதற்கமைய, ஊரதீவு சனசமூக நிலையத்தினர் பொது மக்களிடம் நிதிதிரட்டி 5000 ரூபா பெறுமதியானகாணியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இக்காணிக்கான உறுதியில் ஊரதீவு சனசமூக நிலையத்தின் நன்கொடையென எழுதப்பட்டுள்ளது. பாடசாலைக் கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரியவருகிறது. (கெ)

# "உரிமை வேட்கையை உலகறியச் செய்வோம்"

யாழ்ப்பாணம், வெள்ளி 'கடந்த காலத் தேர்தல்களுக்கும் தற்போது நடைபெறவிருக்கும் தேர்தலுக்கும் வேறுபாடு மிக உண்டு. தமது தனித்துவத்தை நிலைநாட்டும் வகையில் ஒவ்வொரு தமிழனும் வாக்களித்து, தன் உரிமை வேட்கையை உலகறியச் செய்யவேண்டிய வேளை இது' என்று வட்டுக்கோட்டை தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசை ஆதரித்து நெல்லியானில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசு பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் 'தமிழினத்தின் ஒற்றுமையை குலைக்க முற்படும் தீயசக்திகள் தோல்வியையே தழுவும் என்பது திண்ணம்' என்றார்.

# சாந்தி சினிமா வழக்கு: சமாதானமாகத் தீர்ந்தது!

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் சாந்திசினிமா நிர்வாகிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இரு பகுதியினரின் சம்மதத்துடன் சமாதானமாகத் தீர்க்கப்பட்டது.

யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருபகுதியினரும் வழக்கைச் செலவின்றி சமாதானமாகத் தீர்த்து வைக்குமாறு கோரியதைத் தொடர்ந்து நீதிபதி அக்கோரிக்கையைஏற்று சமாதானமாகத் தீர்த்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 1976-ம்ஆண்டு மார்ச்மாதம் 29-ம் திகதி எஸ். எம். ஏ. முகமட்ராஜா, என். ரீ. பேராயிரம் ஆகிய இரு மனுகாரும் சாந்திசினிமா நிர்வாகச் சீர்கேடுபற்றி நிர்வாக இயக்குநரான வீரசிங்கத்திற்கு எதிராக மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

அப்போது யாழ் மாவட்ட நீதிபதி எஸ். சண்முகலிங்கம் முன்னிலையில் வழக்கறிஞர் எஸ் திருச்செல்வம் கியூ. சி. மனுவைச் சமர்ப்பித்துவாதாடினார்.

இதைத்தொடர்ந்து சாந்தி சினிமா நிர்வாகம் முழுவதும் நிர்வாகியின் பொறுப்பிலிருந்து எடுக்கப்பட்டு, தலைவரான தணிகாசலத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அன்று தொடக்கம் நிர்வாகம் சாந்தி சினிமா கம்பனியாரின் சார்பில் தணிகாசலம் பொறுப்பிலிருந்துவந்தது. இவ்வழக்கு ஒன்றரைவருடமாக விசாரணை நடைபெற்று வந்தது. மனுதாரர்கள்சார்பில் சட்டத்தரணி எஸ் ஏச். எம். சரிட், சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர்மனுதாரான நிர்வாகி சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆஜரானார்.

தற்பொழுது மனுதாருக்கும் எதிர் மனுதார்களுக்குமிடையில் உள்ள பிரச்னைகள்யாவும் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு நிர்வாகம் ஒழுங்காக வருகின்றபடியினால் இருசாராரும் சமாதானமாகச்செல்ல சம்மதித்தனர். இதனைஏற்ற நீதிபதி இருபகுதியினரையும் சமாதானமாகச் செல்ல அனுமதித்து தீர்ப்பளித்தார்.

சாந்தி சினிமா கம்பனிக்கு எதிராக 12 பங்காளர்களால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கிலும் இருபகுதியினரும் சமாதானமாகச் செல்லவிரும்பியதால் நீதிபதி சமா ானமாகச் செல்லத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் கம்பனி சார்பில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியமும், மனுதார்கள்சார்பில் சட்டததரணி எஸ். லோகேஸ்வரனும் ஆஜரானார்கள்.

இவ்வழக்கு சமாதானமாகத் தீர்த்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து சாந்திசினிமா நிர்வாகப்பொறுப்பு தற்போதுநிர்வாக இயக்குநர் கணபதிப்பிள்ளை வீரசிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. [க]

## விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் கடற்கரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் சந்தைக்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

'மக்கள் சந்தை' என்ற பெயர்ப்பலகையுடன்செல்லும் இந்த பஸ் யாழ் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு யாழ்நகர் வீதிகள் ஊடாக, மக்கள் சந்தையை சென்றடையும். (க)

## கல்விச் சுற்றுலா

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். கொட்டாவத்தை அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவின்பொருட்டு யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களைச்சென்று பார்வையிட்டனர்.

அவர்கள் பலாலிவிமானநிலையம், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, சங்கிலியன்தோப்பு, 'ஈழநாடு' காரியாலயம் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டனர். கல்லூரி அதிபர் திரு. ச. திருப்பதியும் மற்றும் சகஆசிரியர்களான செ. பரராஜசிங்கம், வே. அமிர்தலிங்கம், திருமதி ம. திருப்பதி ஆகியோரும் மாணவர்களை அழைத்துச் சென்றனர். [கா]

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ. இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........................ |
| 80. | வட்டுக்கோட்டை | ........................ |
| 81. | காங்கேசன்துறை | ........................ |
| 82. | மானிப்பாய் | ........................ |
| 83. | கோப்பாய் | ........................ |
| 84. | உடுப்பிட்டி | ........................ |
| 85. | பருத்தித்துறை | ........................ |
| 86. | சாவகச்சேரி | ........................ |
| 87. | நல்லூர் | ........................ |
| 88 | யாழ்ப்பாணம் | ........................ |
| 89. | கிளிநொச்சி | ........................ |
| 90. | மன்னார் | ........................ |
| 91. | முல்லைத்தீவு | ........................ |
| 92. | வவுனியா | ........................ |
| 94. | திருகோணமலை | ........................ |
| 95. | மூதூர் | ........................ |
| 96. | கல்குடா | ........................ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........................ |
| | (2) | ........................ |
| 98. | பட்டிருப்பு | ........................ |
| 100. | சம்மாந்துறை | ........................ |
| 101. | கல்முனை | ........................ |
| 102. | பொத்துவில் (1) | ........................ |
| | (2) | ........................ |
| 103. | புத்தளம் | ........................ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ............ | ............ | ............ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ. இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ........................ |
| | | 2. | ........................ |
| | | 3. | ........................ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ............ ரூபா ............ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், ஏதேனும் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் 'ஈழநாடு தேர்தல்-77போட்டி' நிபந்தனைக ளுக்கும் அதன் நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும் கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ...

திகதி ..............

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் [illegible] ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன் ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளின் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படி வாக் குகள் = அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றாவ தாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும்.

---

# 'நாம் சுயமரியாதையுடன் வாழவேண்டுமா? இல்லையா?'

— திருநாவுக்கரசு

சங்கானை, வெள்ளி

"தமிழன் இந்த நாட்டிலே சுயமரியாதையுடன் வாழ வேண்டுமா இல்லையா என்ப தைத் தீர்மானிக்கும் சர்வ ஜன வாக்கெடுப்பே இத்தேர் தல். தமிழ் ஈழம் அமைக்க தமிழ் பேசும் மக்கள் தங்கள் உத்தரவை தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கொடுக்கிறார் களா இல்லையா என்பதை இத் தேர்தல் முடிவு செய்யவேண் டும்."

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு சித்தன் கேணி கூட்டணி காரியாலய திறப்பு விழாவில் மேற்கண்ட வாறு கூறினார்.

திரு. கா. பொன்னையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. திருநாவுக் கரசு மேலும்பேசுகையில்குறிப் பிட்டதாவது:-

"காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தந்தை செல்வநாய கம் போட்டியிடும்பொழுது "தமிழ் ஈழம் அமைப்பதற் கான உத்தரவைக் கேட் டோம். ஆனால் ஒன்பதினாயி ரம் தமிழ் மக்கள் தந்தை செல்வாவுக்கும் அவரது இலட் சியத்திற்கும் எதிராக வாக் களித்தனர். இதைக் காரண மாகக்காட்டி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ அம்மையார் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது, ஒன்பதினாயிரம் தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை எதிர்க்கிறார்கள் என்று கூறினார். அதே நேரத்தில் இருபத்தி ஆறாயிரம் தமிழ் மக் கள் தமிழ் ஈழத்தை ஆதரித் தார்கள் என்பதை அவர் மற ந்துவிட்டார். ஆனாலும் அன்று தந்தை செல்வாவை எதிர்த்த தோழர் வி. பொன் னம்பலம் எமது இனத்தின் விடுதலைக்கும் எமது நிலத்தின் விடுதலைக்கும் எம்முடன் இரண் டறக் கலந்து போராடிக் கொண்டிருக்கிறார்.

"இதை நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் தமி ழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக தனிப்பட்ட முறை யிலாவது விழும் ஒவ்வொரு வாக்குகளையும் தமிழ் ஈழத் திற்கு எதிரான வாக்குக்கள் என்றே வரப்போகும் சிங்கள அரசாங்கமும் சிங்களப் பிரத மரும் நினைப்பார்கள்.

'தேர்தல் எமக்கு முக்கிய மல்ல; ஆனால் தமிழ் ஈழக்கோரிக் கையை தமிழ் மக்கள் ஏற்கி றார்கள் என்பதைக் சிங்கள மக்களுக்கும் வெளி நாடுகளுக் கும் காட்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே போட்டி யிடுகிறோம்."

சமசமாஜக் கட்சியைச் சேர் ந்த திரு. மு. நாராயணபிள்ளை பேசும்பொழுது கூறியதா வது:-

"இடதுசாரி இயக்கங்க ளால் எமது இனத்திற்கு விடிவு காலம் கிடைக்குமென்று 32 வருடங்களாக எதிர்பார்த்து ஏமாந்தவன்நான். தோழர் வி. பொன்னம்பலம் பொது வுடைமைவாதியாக இருந்தும் தமிழ் பேசும் மக்களின் நியாய மான கோரிக்கைகளுக்காகக் குரல் எழுப்பியதற்காக கட்சி யிலிருந்து தற்காலிகமாக நீக் கப்பட்டுள்ளார். இது எதைக் காட்டுகிறதென்றால் சிங்கள வர் சிங்களவர்கள்தான். தமி ழர் தமிழர்தான் என்பத னையே. உத்தேச தமிழ் ஈழம் கிடைத்ததும் அங்கும் ஒரு சமத்துவ சோஷலிச அமைப் பிற்கு நாங்கள் போராடு வோம். இதற்கு முதலில் விடு தலை பெறுவோம். பின்னர் சமத்துவம் காண்போம்."

---

### விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். புனித மரியாள் வித்தி யாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் வித்தியாலய முன்றலில் 25,27-ம்திகதிகளில் அதிபர் திரு. வெ. வில்லியம் தலைமையில் நடைபெறும். வடமாநில கல்விப் பணிப்பா ளர் திரு க.சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள் வார்.

---

### மயங்கிவிழுந்து மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வீட்டின் முற்றத்தைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்த வயோதிப மாது ஒருவர் மயங்கி விழுந்து மரண மானார்.

இச்சம்பவம் கல்வி யங்காட்டில் இடம்பெற்றது. சின்னம்மா (வயது 65) என்ற பெண்மணியே இவ்வாறுமரண மானவராவார். இவர் தனது வீட்டைக் கூட்டித் துப்புரவு செய்து கொண்டிருந்த சமயம் திடீரென மயங்கி விழுந்துவிட் டதாகவும், இதைக் கண்ட அயலவர்கள் அவரைத்தூக்கிப் பார்த்தபோது அவர் இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது. (கா)

---

வட்டுக்கோட்டை அரசினர்

# ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை! சிலநாட்களில் டாக்டரும் இல்லையாம்!!

சங்கானை, வியாழன்

வட்டுக்கோட்டை அரசினர் ஆஸ்பத்திரியில் நிலவும் மருந் துத்தட்டுப்பாடு காரணமாக அராலி கொட்டைக்காடு, வட் டுக்கோட்டை, மூளாய்,தொல் புரம், சுழிபுரம், சித்தன்கேணி துணைவி, சங்கரத்தை போன்ற இடங்களிலிருந்து செல்லும் நோயாளர்கள் ஏமாற்றத் துடன் வீடு திரும்புகின்றனர்!

பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் மருந்துக் களஞ்சியம் ஒன்று நிறுவப்பட்டிருந்தும், இங்கு மருந்தில்லை என்பது இப் பகுதி மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள் ளது. சாதாரணக் காய்ச்சலுக் குக் கொடுக்கும் மருந்துமுதல் எந்தவிதமான மருந்துவகை களும் இங்கு இல்லையாம்!

உதவி வைத்திய அதிகாரி களின் வேலைநிறுத்தம் காரண மாக இங்கு ஒரு டாக்டர் மட் டுமே கடமை புரிகின்றார். இவ ரும் சில சந்தாப்பங்களில் நீதி மன்றத்திற்கு சாட்சியமளிப்ப தற்கும், பிரேதபரிசோதனை களுக்கும் செல்லவேண்டியிருப் பதால், அந்தநேரங்களில்வரும் நோயாளர்கள் ஆஸ்பத்திரி பூட்டப்பட்டிருப்பது கண்டு ஏமாற்றத்துடன் வீடுதிரும்பு கின்றனர்.

அண்மையில், இந்த ஆஸ்பத் திரிக்குகொண்டுசெல்லப்பட்ட விபத்தில் சிக்கிய ஒருவரும், பலத்த வெட்டுக்காயங்களுக் கானாகிய ஒருவரும் வேதனை யுடன் வந்த கர்ப்பிணி ஒருவ ரும் டாக்டர் இல்லாததால் பல மைல்களுக்கப்பால் உள்ள ஆஸ்பத்திரியை நாடிச்செல்ல நேரிட்டதாம்! இந்த ஆஸ்பத் திரியில் டாக்டர்இல்லாதநாட் களில் யாழ்ப்பாணத்திலிருந்து பதிலுக்கு எந்த டாக்டரும் அனுப்பப்படுவதில்லையாம். இது பற்றி இப்பகுதி உள்ளு ராட்சி மன்றங்களுக்கு மக்கள் புகார் செய்துள்ளனர்.

---

### சிரமதானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலயத்தில் மேற்கொள்ளப் பட்டுவந்த முதல்கட்ட சிரமதானப்பணி முடிவ டைந்தது. கோவிலின் சுவர்களுக்கு பூச்சுவேலைகளும், புதிய நிர்மாண வேலைகளும் இவர்களால் செய்யப்பட்டது. இச்சிரமதானப் பணியினை சைவ மன்ற ஆலோசகர் திரு. காசி விசுவநாதன் தொடக்கி வைத்தார். இக்கோவில்இன்று வருடாந்த உற்சவம் ஆரம்பிக் கப்படுவதால் [illegible] முடிவ டைந்தது [illegible] அளவிலான இரண்டாம்கட்ட சிரமதானப் பணிகள் மேற் கொள்ளப்படுமெனத் தெரிய வருகிறது. (கா

---

# "நமது மண் பறிபோவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது"

மட்டுவில், வியா

"தமிழனை ஒரு சிறுபான்மை இனம் என்று சிங்கள ஏகாதி பத்தியம் கூறுகிறது. அந்த அடிப்படையிலேதான் ஏதோ சிறு சலுகைகளைக்காட்டிக்கண் துடைப்புச் செய்யப்பார்க்கி றது. தமிழன் உண்மையிலே ஒரு சிறுபான்மைஇனம் அல்ல. அவன் ஒரு தேசிய இனம். ஆண்ட இனம்.மீண்டும்ஆளத் துடிக்கும் இனம்."

இவ்வாறு சாவகச்சேரியில் சுயேச்சையாகப் போட்டியிடும் தமிழ்ஈழ அரசுக்கழகத்தலைவர் திரு. சதா நடராசா கூறினார். கழக அலுவலகத்தில் நடை பெற்ற கருத்தரங்கில் தலைமை வகித்துப் பேசுகையில் தான் மேற்கண்டவாறு கூறினார். திரு. நடராஜா தொடர்ந்து கூறியதாவது:

"இன்று நமது மத்தியிலே உள்ள இரு பெரும் அரசியல் கட்சிகளில் ஒன்று பொருளா தாரச்சுதந்திரம் வேண்டுமென் கிறது. மற்றது மொழிச்சுதந் திரம்தான் வேண்டுமென்று கூறுகிறது. ஆனால் தமிழ் ஈழ அரசுக்கழகமோ இரண்டும்அத் தியாவசியம் வேண்டுமென்று அடித்துக்கூறுகிறது இந்த உண்மையை நான் 1961ம் ஆண்டு முதல் கூறிவருகிறேன். எமது தமிழ் தொகுதிகளில் அம்பாறை, சேருவெல ஆகிய இரு தொகுதிகள் சிங்களவர் கையில் சிக்கிவிட்டது. இரண்டு தேர்தல் தொகுதிகள் என்று சாதாரணமாகக் கூறிவிட் டோம். ஆனால் ஆயிரத்து நானூறு சதுரமைல்கள் 9 லட் சம் ஏக்கர் தமிழ் மண் பறி போய்விட்டது. இதுஒருசாதா ரண விஷயமா? இப்படிச் சிறு கச் சிறுக நமது தமிழ்மண்பறி போய்க் கொண்டிருக்குமானால் ஈற்றில் கழுதை தேய்ந்து கட் டெறும்பான கதையாகவே முடியும். இதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடி யாது."

திரு. தில்லைநாதன், திரு. கந்தசாமி உட்படப்பலர் பேசி னர்.

---

### யாழ். வளாக இந்து மாணவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். வளாக இந்து மாண வர் சங்கப் புதிய செயற்குழு வில் தலைவர் திரு. த. பாக்கிய நாதனும், செயலாளர் சி. சிவலிங்கராசாவும், பொரு ளாளராக சி. ஜெயராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ள னர். (கி)

......

### விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தெய்வீக வாழ்க்கைச் சங்கத் தின் மலேஷியக்கிளைத் தலைவர் சுவாமி பிரணவானந்தமகராஜ் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இங்கு ஒருவாரம்வரை தங்கி யிருக்கும் அவர் புனித ஸ்தலங் கள் பலவற்றிற்கு விஜயம்செய் வதுடன் சமய சொற்பொழிவு களும் நிகழ்த்திவருகிறார். (உ)

# கால்நடை வளர்ப்புத்திட்டம்

## யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியின் பால் தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாகக் கால்நடைவளர்ப்புத்திட்டமொன்று செயற்படுத்தப்பட உள்ளது.

இதனைத் தொடர்ந்து கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளில் பசும்புல்வளர்ப்பை விருத்தி செய்வதுடன் பாற்பண்ணை அமைக்கும் நடவடிக்கையும் உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளது.

கால்நடைகளுக்கான தீவனம், பசும்புல் போன்றவை போதிய அளவு இன்மையும், உற்பத்தி இனங்கள் போதிய அளவு வழங்கப்படாமையுமே கால்நடைத்திட்டம் இதுவரை காலமும் அமுல்படுத்தப்படாமல் தாமதப்பட்டுவந்ததற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாற்பண்ணையும் பசும்புல் வளர்த்தலும் இணைந்தபிரதேச அபிவிருத்தித்திட்டமொன்றும் ஆரம்பித்து வைக்கப்படும். குடாநாட்டில் கூட்டுறவுப் பாற்பண்ணை ஊடாகப் பால் சேகரித்து விற்பனை செய்யும் பிரதேச அபிவிருத்தித்திட்டமொன்றும் ஆரம்பித்து வைக்கப்படும்.

குடாநாட்டிலிருந்து சேகரிக்கப்படும் பாலைக்குளிரூட்டிப் பாதுகாப்பதன் பலனாகப் பாலுற்பத்தியை ஊக்குவிப்பதற்கு மத்தியநிலையமொன்றை நிறுவுவதற்கு தேசியபாற்சபையிடமிருந்து உபயோகப்படுத்திய குளிரூட்டும் இயந்திரம் ஒன்றைப்பெறவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யு.ஏ.எல். விஜயபால இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார். (உடு-திரு)

## 'தமிழ்ஈழம் காணும்வரை ஓயாது உழைப்பேன்'

### சிவசிதம்பரம் உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

பல எதிர்ப்புக்கள், சட்சிகள் தோன்றினாலும் அவை நாளடைவில் மறைந்துவிடும் சுதந்திர சமதர்ம தமிழீழத்தை அமைப்பதற்காக நான் ஓயாது உழைப்பேன். என்று திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வரா ஒழுங்கையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினார்.

நல்லூர்த் தொகுதி வேட்பாளரான அவரை ஆதரித்து நடந்த இக்கூட்டத்திற்கு திரு சி. கமலநாதன் தலைமை வகித்தார்.

திரு. மு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், எமது கொள்கைகளை முறியடிக்கச் சிலர் முயற்சித்தாலும் அவற்றிற்கு செவிசாய்க்காமல் தொடர்ந்தும் போராடுவோம். கடந்த 70ம் ஆண்டுத் தேர்தலின் போது எமது காங்கிரஸ் கட்சியில் இருந்து பாராளுமன்றம்சென்ற சிலர்எனதுவேண்டுகோளை நிராகரித்து செயல்பட்டனர். இவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து புதிய அரசியல் சாசனத்திற்கு கைச்சாத்திட்டது தமிழ் இனத்திற்குச் செய்த பெருந்துரோகமாகும், நீங்கள் தனிப்பட்ட முறையில்வாக்களியாமல் கூட்டணியின் கொள்கைக்காகவும் இலட்சியத்திற்காகவும் வாக்களியுங்கள். என்றார்.

திரு. அந்தனிசில் பேசுகையில்உலக நாடுகளில் வாழ்கின்றஆறு கோடி தமிழர்களும் கேடு கெட்ட நிலையில் தான் வாழ்கின்றனர் இவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஒரு நாடுதானும் கிடையாது. அந்த நல்லநாள் மிகவிரைவில் வரப்போகின்றது. இதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் ஆற்றும் பணிதமிழினத்தின் விடிவுக்கானபணியாகும் என்றார்

திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில், எமது கட்சிக்கெதிராகப் போட்டியிடுகின்ற சிலர் நமது கொள்கைகளையே தெரிவிக்கின்றனர். அந்த முறையில் அவர்களுக்கு நன்றி கூறவேண்டும். ஆனால் இவர்கள் சுயநலம்கருதியே இப்படிப் பேசுகின்றனர். எனவே அவர்களுக்கு மக்கள்தான்பதிலளிக்க வேண்டும் என்றார்.

திரு. ஆர். விசுவநாதன் பேசுகையில் தமிழ்மக்களின் எந்தவொரு உரிமைகளையும் வழங்காத இந்த அரசுக்குச் சாதகமாக வாக்களித்த நண்பர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில்கூட போட்டியிடுகின்றனர். இவர்கள் இன்று மக்கள்முன் பிரசன்னமாகமுடியாத நிலையில் இருக்கின்றனர் என்றார். [கு]

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண தபாலகத்தில் பெண் தொலையச்சு இயக்குநராக, 6 வருடங்களாகக் கடமையாற்றிய செல்வி சாந்தினி செபஸ்தியாம்பிள்ளை கொழும்பு மத்திய தபாலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவருடையஇடத்திற்கு, மத்திய தபாலகத்தில் கடமையாற்றும் திருமதி அருளய்யா நியமிக்கப்பட்டுள்ளார். செல்வி சாந்தினிசெபஸ்தியாம்பிள்ளைக்கான பிரிவுபசார வைபவம் யாழ். தபாலகத்தில் நடைபெற்றது. (கெ. இ)

ஃ ஃ

யாழ்ப்பாணம், வெள்ளி

பல்லவராயன் கட்டுக் கிராம சபையின் ஆயுர்வேத இலவச வைத்தியசாலையில் கடமை புரிந்த டாக்டர் திரு. க. பொ. சண்முகரத்தினம்,பூநகரிகிராம சபையின் ஆயுர் வேத வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (கா-உ)

## எம்.ஜி. ஆர். அமைச்சரவை பதவிஏற்பு: நேரம் மாற்றம் இடமும் மாறலாம்

சென்னை, ஜூன் 23

தமிழ்நாட்டில் எம் ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக புதிய அமைச்சரவை இம் மாதம் 30-ந் திகதி காலை 9-15 மணிக்கு பதவி ஏற்கும் என்று தமிழக ஆளுநரின் செயலாளர் திரு வி. கார்த்திகேசன் தெரிவித்தார்.

பகல் 12-30 மணிக்கே அமைச்சரவை பதவி ஏற்கும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இப்போது நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### இடமும் மாறலாம்

சென்னை ராஜாஜி மண்டபத்திலேயே இந்தப் பதவி ஏற்பு வைபவம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பதவி ஏற்பு வைபவத்தைப் பார்வையிட பெருந்திரளான மக்கள் வருவார்கள் என எதிர்பார்ப்பதால் இவ் வைபவத்தை வேறு ஒரு பிரமாண்டமான மண்டபத்திற்கு மாற்ற ஆலோசனை செய்யப்பட்டு வருவதாகவும் திரு. கார்த்திகேசன் தெரிவித்தார்.

### பாண்டிச்சேரியில்...

இதே வேளையில் பாண்டிச்சேரியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு உள்ள பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க இம்மாதம் 28-ந் திகதி வரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

## அனுமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தில் புவியியற் பாடத்தில், உயர் பட்டங்களுக்கு ஆராய்ச்சி செய்வதற்கு மாணவர்களில் முதுகலை கலாநிதிப்பட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி தெரிவித்தார்.

யாழ் வளாகத்தில் ஏற்கெனவே தமிழ், சிங்களம், வரலாறு, இந்து நாகரிகம், கணிதம் ஆகிய துறைகளில் முதுகலை, கலாநிதிப்பட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோதும்புவியியலில் இதுவே முதல் தடவையாக அனுமதி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (கா


REGAL (JAFFNA) Daily: at 10-30, a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m. only

Dicing with Danger, Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champague, Eye- CatchingGirls... and Ruthless Crooks.

Tony Curtis - Roger Moore - Susan George in "Mission Monte Carlo" (Color) (Action Packed Film)

சாந்தி யாழ். நகர் தினசரி 4 காட்சிகள் போன்; 7642 10-30,2-30,6-30,9-45

சிவாஜி ஃ விஜயா ஃ ராஜம்மா ஃ ரங்கராவ் நடித்த K. S. கோபாலகிருஷ்ணனின்

செல்வம் (புதிய பிரதி)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.

The sexiest comedy hit of the year WARREN HITCHELL In All The Sexy Way Up (color) (Strictly adults)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

ஸ்ரீதரின் வைரநெஞ்சம் (ஈஸ்ட்மன் கலர்)

53-வது நாள் ராணி (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த தினசரி 4 காட்சிகள்

நாளை நமதே (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ். நகர்] சௌகார்ஜனகி நடித்த தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள் கானல்நீர்

லிடோ போன்: 7693 (யாழ்.நகர்) (புதிய பிரதி) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45 ஜெய்சங்கர் நடித்த வல்லவன் ஒருவன்

மனோகரா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் சிவாஜி (இருவேடங்களில்) நடித்த மனிதனும் தெய்வமாகலாம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) இன்று முதல் குதூகல ஆரம்பம் தினசரி 4 காட்சிகள் சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி மற்றும் பலர் திறம்பட நடித்த ஈழத்திரையோவியம் ஜெயேந்திரா மூவிஸ் காத்திருப்பேன் உனக்காக

நாகம்ஸ் (சுன்னாகம்) தினசரி 6-30, 9-30 சனி ஞாயிறு 2-30 சிவாஜி—விஜயா நடித்த தங்கப்பதக்கம்

வெஸ்லி [மானிப்பாய்] தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30 ராஜன் - பிரமிளா வீட்டு மாப்பிள்ளை

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை) தினசரி 2-30, 6-30, 9-30 சனி, ஞாயிறு 10-30 முத்துராமன் - சுஜாதா வாழ்ந்து காட்டுகிறேன்

ராஜா (யாழ்நகர்) 8-வது வாரம் தினசரி 4 காட்சிகள் போன்: 7180 தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ஈழநாடு
The EELANADU

# ''சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் பங்கு முக்கியமானது''

—மு. சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம், வெள்ளி
'ஒருநாட்டின் சுதந்திரத்தில் அந்நாட்டுப்பெண்களின் பங்கு, எத்தகைய முக்கியம் என்பதை சுதந்திரம்பெற்ற நாடுகளின் சரித்திரம் நமக்குச் சான்றுகளாய் உள்ளன'.

இவ்வாறு நல்லூர் மகளிர் பேரவைக் கிளையொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப்பேசிய நல்லூர்த் தொகுதி அபேட்சகர் திரு மு. சிவசிதம்பரம் கூறினார். அவர் தொடர்ந்து தமதுரையில் 'பலநாடுகள் சுதந்திரத்திற்காகப் போராடியவேளைகளில் அந்நாட்டுப் பெண்கள் ஆற்றிய வீரசாதனைகள் அளப்பரியன. இன்று இந்நாட்டில் தமிழர்கள் தமக்கென ஒரு தனிநாடு தேவை என்பதை உணர்ந்துள்ளவேளையில் அந்தப் புனித போராட்டத்தில் தாய்மாரினதும் பெண்களினதும் பங்கு மிக முக்கியமாகிறது. தமிழ்ப்பெருந் தலைவர்களால் ஆரம்பித்துவைத்த பேரியக்கமான தமிழர் விடுதலைக்கூட்டணி சகல தொகுதிகளிலும் வெற்றிபெற பெண்கள் அதி முக்கியமாகச் செயலாற்ற வேண்டும்' என்றார்.

செயலாளர் திருமதி குணசேகரம் பேசுகையில், இன்று உலகின் பலபாகங்களிலும் தமிழர்கள் நாடற்ற அனுதைகளாக, தட்டிக்கேட்க ஒரு தனியரசற்றவர்களாக வாழும் நிலைமாறவேண்டுமானுல் ஈழத்திலே தமக்கென ஒரு 'தனிஅரசு அமைப்பதன்மூலமே முடியும். அந்தப் புனிதமான பணியைத் தனது லட்சியமாக முன்வைத்துத் தமிழர் கூட்டணி ஈழத்தில் 24 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. பேரணி பெரும்பான்மைப்பலத்துடன் பாராளுமன்றத்தில் தமிழ்ஈழக்குரல் எழுப்ப, மாதர்களாகிய நம்மால் தொடங்கப்பட்டுள்ள மகளிர்பேரவை தன்னுல்ஆன சேவையைச்செய்ய வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார்.

உபதலைவர் திருமதி. து புவனம் பேசுகையில், உலகில் பல மொழிகள் உள. அவை எல்லாவற்றிலும் அதிசிறந்த மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். அத்தகைய பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய முதுமொழி ஈழத்தில் மாத்திரமல்ல உலகின் பலநாடுகளிலும் 2-ம் தர அடிமை மொழியாகவே உள்ளது இந்தநிலை மாற தமிழர் தனிக்கொடியுடன் தன்னுட்சி காணவேண்டும்; இல்லையேல் ஒருகாலகட்டத்தில்தமிழ்என்ற தொருமொழி இருந்ததைச் சரித்திரம் வாயிலாகத்தான் நாம் அறியவேண்டிய துர்ப்பாக்கியம்ஏற்படும்என்ருர் [கா]

## மர்மம் நீடிக்கிறது

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ். பெரியாஸ்பத்திரியில் இருந்து கடந்த திங்கட்கிழமை காலை காணுமல்போய்விட்ட குழந்தைபற்றிய மர்மம் இன்னமும் துலங்கவில்லை.

கடந்த இரவுவரை இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை.

இதுபற்றிய பொலிசாரின் புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட குழந்தையின் அன்னை தொடர்ந்தும் ஆஸ்பத்திரியிலேயே இருந்துவருகிருர்.

## 'யு. என். பி.தான் அரசாங்கம் அமைக்குமாம்'

யாழ்ப்பாணம், வெள்ளி
'எமது கட்சியே வரப்போகும் அரசாங்கத்தை அமைக்கும். இலங்கை மக்கள் எமது கட்சியே நாட்டைச் சுபீட்சமாக வழி நடத்தும் என்பதில் திடமான நம்பிக்கை கொண்டுள்ளனர்.'

இவ்வாறு நெடுந்தீவு மேற்கில் நடைபெற்ற ஐ. தே. க. கருத்தரங்கில் ஊர்காவற்றுறைத் தொகுதி ஐ. தே. க. வேட்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் குறிப்பிட்டனர். மேலும் அவர் பேசுகையில், 'இன்று இளைஞர்கள் சகல துறைகளிலும் மனவிரக்தி அடைந்துள்ளனர். அவர்களின் மனக்குறைகளைப் போக்கி, இளைஞர் சக்தி இந்நாட்டை வழிநடத்தக்கூடிய வகையில் 'இளைஞர் கவுன்சில்கள்' அமைக்கப்படும். இக் கவுன்சில்கள் மூலம் இளைஞர்களை முன்னேற்றுவதற்காக ஒரு அமைச்சர் பொறுப்பாக நியமிக்கப்படுவார். இவர் மூலம் இளைஞர் குறைகள் நீக்கப்படும். அதேவேளையில் தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்குதல் போன்றவற்றைத் தீர்மானிப்பதற்காக நிறுவப்படும். 'தொகுதி அதிகார சபையில்' இளைஞர் முக்கிய பங்கு வகிப்பர். இதன் மூலம் முன்னைய ஆளுங்கட்சியினர் தொகுதிக்குத் தொகுதி தரகர்களை உருவாக்கியதுபோல் நாம் உருவாக்கமாட்டோம்.

கிளை உத்தியோகத்தர் தெரிவின்போது திரு. தா. கதிரேசு தலைவராகவும், க. பேரம்பலம் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் பலர் பேசினர். (கா)

## ஆணையாளருக்கு கோரிக்கை

பண்டத்தரிப்பு, வியா.
பண்டத்தரிப்பு பட்டண சபையின் கீழ் இயங்கிவரும் பொதுசன வாசிகசாலையை பொதுமக்களின் நலன்கருதி இரவு 8 மணி வரையும் திறந்து வைக்குமாறு பண்டத்தரிப்பு பட்டண விசேட ஆணையாளரை இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

இப்பகுதியைச் சேர்ந்தவிவசாயிகள், அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் ஓய்வு நேரத்தில் பத்திரிகைகள்படிக்க வசதிசெய்யுமுகமாக இந்த வாசிகசாலையை தினமும் இரவு 8 மணிவரை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் தயாரிக்கப்பட்ட மற்றுமொரு தமிழ் படமான ''காத்திருப்பேன் உனக்காக'' இன்று திரையிடப்படுகிறது. ஜெயந்திரா மூவிஸாரின் வெற்றிப் படமான ''காத்திருப்பேன் உனக்காக'' படத்தில் இங்கு இளநங்கை யாரைக்காத்து நிற்கிருரோ?

## நல்லூர்...

(1ம் பக்கத்தொடர்ச்சி

சென்றனரென்றும், அப்போது சைக்கிளில் ஓடிய கொள்ளைக்காரர்கள், ''கள்ளன்... கள்ளன் ...கள்ளனைப்பிடி...'' என்றுகத்தினர் என்றும், அருளும்செட்டித்தெரு அருகே வந்ததும், தாங்கள் இனித்தப்பமுடியாதென்று தெரிந்து சைக்கிள்களையும் விட்டு, வீட்டுமதில்கள் மீது ஏறி தப்ப முயற்சித்தனரென்றும் தெரியவருகிறது.

### பிடிபட்டனர்

சைக்கிளில் ஓடித்தப்ப முயற்சித்து பின்னர்சைக்கிள்களையும் விட்டு, வீட்டு மதிற்சுவர்களினுல் பாய்ந்து தப்பிஓட முயற்சித்தபோது பொதுமக்கள் இவர்களைப்பிடித்து, அப்பொழுது அங்கே வந்த பொலிஸாரிடம் ஒப்படைத்தனராம். மூவர் பிடிபட்டனர். இவர்களுடன் மூன்று சைக்கிள்களும் பிடிபட்டன.

### றிவோல்வருடன் கத்தியும் பிடிபட்டது

மூன்று இளைஞர்களையும் பொலிஸார் கைதுசெய்த போது, அவர்களிடமிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகளும் ஒரு கத்தியும் கைப்பற்றப்பட்டன.

### 24 வயதுக்குட்பட்டவர்கள்

கிராமியவங்கியில் கொள்ளையடித்தவர்கள் 21 வயதுக்கும் 24 வயதுக்கும் உட்பட்டவர்கள் என்று பொலிஸ்விசாரணையில் தெரியவந்தது.

இக்கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்து வந்துள்ளார்கள் என்றும் தெரிகிறது.

பொலிசார் பாதுகாப்பு காரணங்களுக்காக மேல்விசாரணை முடிவடையும்வரை இவர்களின் பெயர்களை வெளியிட மறுத்துவிட்டனர்.

### கொள்ளைபோன பணம், நகை

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற பொலிஸ் விசாரணை செய்திகளின்படி, கொள்ளையடிக்கப்பட்ட நகை, ரொக்கப்பணத்தின் பெறுமதி சுமார் 12,000 ரூபாய் இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

சைக்கிளில் சென்று வங்கியில் கொள்ளையடித்தவர்களில் மூவர் சில மணிநேரத்தில் பிடிபட்டனர். மற்றைய இருவரையும் தேடிக் கண்டுபிடிப்பதில் யாழ். பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ். செனிவரத்ன தலைமையில் உதவிப் பொலிஸ் அதிபர்கள் ஜனப் எம். நூர்தீன், திரு. ஹென்றி சில்வா, பதில் தலைமைக்காரியாலயப் பொறுப்பதிகாரி திரு. கே. பத்மநாதன் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தவறணைக்கு அருகில் ஒருவர் கொலை!

யாழ்ப்பாணம், வெள்ளி
35 வயது நபர் ஒருவர் மண்டாவால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மறவன்புலோவில் உள்ள கள்ளுத்தவறணைக்கருகே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தச்சன்தோப்பைச் சேர்ந்த கந்தன் ஐயாத்துரை என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இச்கொலைக்கு பழைய பகைமையே காரணம் எனக் கூறப்படுகிறது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. அல்விஸ் புலன் விசாரணை செய்து வருகிருர்.

இக்கொலை தொடர்பாக இதுவரை எவரும் கைதாகவில்லை. (இ)

## முகமூடிக் கொள்ளையர் அட்டகாசம்

மாத்தளை, வியா.
மாத்தறையில் உள்ள டொனு கருணவதி என்பவரது வீட்டிற்குள் அதிகாலைவேளை புகுந்த அறுவர் கொண்ட முகமூடிக் கொள்ளைக்கோஷ்டியொன்று வீட்டாரைக் கட்டிப்போட்டுவிட்டு, நகைகள், பணம், 1500 ரூபா பெறுமதியான உடைகள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அதிகாலை மூன்று மணிக்கு நடைபெற்ற இக் கொள்ளையில் ஈடுபட்ட இலந்தெரியாத கோஷ்டியை மாத்தறைபொலிசார் தேடிவருகின்றனர்.

கொள்ளையரிடம் கைத்துப்பாக்கி, கிறிஸ்கத்தி என்பன இருந்தனவாம் [உ]

## தையல் பயிற்சி நிலையம்

மட்டக்களப்பு, வியா.
அகில இலங்கை காந்தி சேவாசங்க மட்டக்களப்புக் கிளை, பட்டிருப்புத் தொகுதியில் உள்ள ஒந்தாச்சிமடம் என்னும் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையமொன்றை திறந்துவைத்துள்ளது இந்த நிலையத்தை மட்டக்களப்புக் கிளைத்தலைவர் திரு பி. ரி. அரசன் ஜே. பி. திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் அகில இலங்கை சர்வோதய இயக்கத் தலைவர் திரு. கதிர் பாரதிதாசனும் கலந்துகொண்டார்.

## 9 மொழிவழித்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

○ தமிழினத்தின் ஐக்கியத்தைப் பிரதிபலிக்கும்வகையில், தமிழ் ஈழத்தின் மேற்கு எல்லையாக அமையும் புத்தளம் தொகுதியிலும் 30 ஆண்டுகளாக நமது பிரதிநிதித்துவத்தை இழந்து மீண்டும் போட்டியிடும் கொழும்பு மத்திய தொகுதியிலும் அதிக கவனம் செலுத்துதல்.

○ வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தொகுதிகளில் வீடுவீடாகச் சென்று தீவிர. பிரசாரம் செய்தல். (ம-இ)

## மூவாயிரம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பார்க்க விரைவாக வற்றச் செய்தது. இதன்விளைவாக நீர்பற்றுக்குறை ஏற்பட்டு 3,000 ஏக்கர் காணியில் நெற்செய்கையைக் கைவிடவேண்டியநிலை ஏற்பட்டது

'புலோலி, அம்பன், புத்தூர், வேலணை, தொல்புரம், நல்லூர், பளை, உடுவில், கீரிமலை, சாவகச்சேரி ஆகிய கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுப்பகுதிகளில் வரட்சி நிலைமையைச் சமாளிப்பதற்கென ஏச். 4, 62/355 போன்ற பழைய சிறந்தஇனநெல்லினங்கள் விதைக்கப்பட்டன.

## இன்று

[illegible]

யா[illegible]ணம், வெள்ளி
சாவகச்சேரி இந்துக்கல்லூரி செயற்திட்ட மாணவர்கள், சுகாதார இலாகாவின் அனுசரணையுடன எடுக்கும் உலக சுகாதாரதின விழா இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு தலைமையில் நடைபெறுகிறது. கருத்துரையை திரு. க. சந்திரசேகரமும் சிறப்புரையை சுகாதார அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எஸ். திசநாயக்காவும், சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி செல்வி எஸ். சின்னததுரையும், சுகாதார போதனாசிரியர் கே. குமாரசிங்கமும் வழங்குவார்கள்.

இவ்விழாவில் விவாதமும், கல்லூரி மாணவிகளின் ''அன்னையின்மேல் ஆணை'' என்ற நாடகமும் இடம் பெறும். சிறப்பு நிகழ்ச்சியாக படக்காட்சியும் இடம் பெறும். (கா-இ)

0 0 0

(அரியாலை)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று மாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கொழும்பு ஆச்சடீக்கன் வணக்கத்துக்குரிய பிதா சுவீதின் பெர்னுண்டோ கலந்து கொள்கிருர்.

திருமதி சுவீதின் பெர்னுண்டோ பரிசில்கள் வழங்குவார். கல்லூரி அதிபர் திருமதி செல்லையா கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார். (இ)

0 0 0

(சண்டிலிப்பாய்)

சீரணி உவானந்த வைரவர் கோவில் ஆனி உத்தர விழா இன்று பகல் நடைபெறுகிறது.

இரவு ''கற்பரசி கண்ணகி'' என்ற புராண இசை நாடகம் நடைபெறுகிறது. (இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.